Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :255 ஆடி 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 11 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## வாக்களிக்க மறந்தனர் 48 லட்சம் பேர்

கொழும்பு, ஓக. 11
பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற 48 லட்சத்து 79 ஆயிரத்து 163 பேர் வாக்க ளிக்கவில்லை. 23

## 28 அமைச்சர்களுடன் புதிய அமைச்சரவை

### இராஜாங்க அமைச்சர்கள் 40 பேர் சிறப்பு வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஓக.11
புதிய அமைச்சரவைக் கட்டமைப்பில் 28 அமைச்சர்களும், 40 இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்படவுள்ளனர். அது தொடர்பான சிறப்பு வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சரவையின் எண் 23

# கூட்டமைப்பு தோல்வியடைய தமிழீழக் கொள்கை காரணம்!

### கொள்கையை விடாவிடில் தொடர் தோல்வி என்கின்றது இராவணா பலய

கொழும்பு, ஓக. 11
தமிழீழக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு அரசியல் நடத்து வதற்கு இனியாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்த தேர்தலில் படுதோல்வி உறுதியாகும் இவ்வாறு ராவணா பலய அமைப்பின் பொதுச்செயலர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குவங்கி சரிந்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். 23

## வழிப்பறி கொள்ளையர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஓக.11
பலாலி, அச்சுவேலிபொலிஸ் பிரிவுகளில் வீதியில் செல்லும் பெண்களிடம் தங்க நகைகளை அபகரிக்கும் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் சுடலை ஒன்றில் மறைந்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்து, அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் பலாலி பொலிஸ் பிரிவில் வீதியால் சென்ற பெண்ணின் 2 தங்கப் பவுண் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் இருவரால் அபகரிக்கப்பட்டது. அதுதொடர்பில் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற வீதியில் ஓர் இடத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமராக்களின் உதவியுடன் 20

# தேசியப் பட்டியல் கலையரசனுக்கே

### துரைராஜசிங்கம் விடாப்பிடி பங்காளிக் கட்சிகள் போர்க் கொடி உடையுமா கூட்டமைப்பு?

திருகோணமலை, ஓக.11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனம் தவராசா கலையரசனுக்கே வழங்கப்பட்டுள்ளது. அதில் மாற்றம் எதையும் ஏற்படுத்த முடியாது. நானே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர். அதனடிப்படையில் தவராசா கலையரசனின் பெயரைப் பரிந்துரைத்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளேன். இந்த முடிவில் மாற்றத்தை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. 23

## அராலியில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.11
அராலி கிழக்கு மற்றும் அராலி தெற்குப் பகுதியைச் சேர்ந்த இருவா கட்டுத்துப்பாக்கி மற்றும் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டைப்பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்றுக் காலை மேற்கொண்ட சுற்றிவளைப்பி 21

## 25 பேருக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, ஓக.11
கொரோனா தொற்றுக்குள்ளான 25 பேர் நேற்று நாட்டின் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சேனவுர புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த 23

## முயற்சிகள் பலித்திருந்தால் உயிர்கள் பலியாகியிருக்காது

### எரிக் சொல்ஹெய்ம் ஆதங்கம்



கொழும்பு, ஓக.11
இலங்கையில் நோர்வே முன்னெடுத்த சமாதான முயற்சிகள் வெற்றியளித்திருந்தால் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் என்று இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் 22

## வர்த்தமானியில் கலையரசன் பெயர்!

கொழும்பு, ஓக.11
29 தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 19 பேரின் பெயர்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராகப் பரிந்துரைக்கப்பட்ட தே.கலையரசனின் பெயரும் வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த ஒரேயாரு தேசியப்பட்டியல் 23

# தமிழ் தலைமைகள் ஒன்றிணைந்து செயலாற்றுவதே மக்கள் விருப்பம்

### யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, ஓக.11
தென்னிலங்கைத் தலைவர்கள் இணைந்து பலமாக இருக்கும் அதேநேரம், தமிழர் தரப்பு பலவீனமான நிலையை நோக் 21

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating "A" (lka)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாய்ப்பை பயன்படுத்தி அரசு யாப்பை உருவாக்க வேண்டும்

## வாசுதேவ வலியுறுத்து



**கொழும்பு, ஓக.11**

**தெற்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்துடன் வடக்கு, கிழக்கு மக்களும் கைகோர்த்துள்ளதைத் தேர்தல் பெறுபேறுகள் காட்டுகின்றன. அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் மக்கள் ஆணையைப் பயன்படுத்தி நாட்டுக்குப் பொருத்தமான அரசியல் யாப்பொன்றை அங்கீகரித்துக் கொள்ளவேண்டும்.**

**இவ்வாறு வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

தேர்தல் வெற்றி தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுத் தேர்தல் முடிவுகள் இலங்கையின் பயணப் பாதையை புதியதொரு திருப்புமுனைக்கு இட்டுச்சென்றிருப்பதைக் காட்டுகின்றன. நாட்டைக் கட்டியெழும்புவதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச இருவரும் மக்கள் முன் வைத்திருந்த திட்டங்களின்படி அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு, புதிய தேர்தல் முறைமை ஒன்றை மேற்கொண்டு நாட்டுக்கு பொருத்தமான அரசியல் யாப்பொன்றை அங்கீகரித்துக் கொள்ள, தற்போதுள்ள தேர்தல் முறைமையிலும் மக்கள் ஆணை ஒன்றைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளமை பெரும் வெற்றியாகும்.

இந்த தேர்தல் வெற்றி, மக்களின் வளங்களைப் பாதுகாப்பது உட்பட தேசிய பாதுகாப்பு, மக்கள் மயமான அபிவிருத்தி, மோசடி, பாதாள மற்றும் போதைப் பொருள் வியாபாரத்துக்கு எதிரான யுத்தத்துக்கான மக்களின் ஆதரவாகும். அதேபோன்று வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலும் முற்போக்கு தமிழ் மக்கள் சக்திகளும் தெற்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்துடன் கைகோத்திருப்பதை தேர்தல் பெறுபேறுகள் காட்டுகின்றன.

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்கள் பிரதேசங்களில் மேற்கொண்டிருந்த ஆட்சி வீழ்ச்சியுற்று, ஜனநாயக சக்திகளுக்கு சந்தர்ப்பங்கள் விரிவடைந்திருப்பது குறிப்பிடத்தக்க மாற்றமாகும். உழைக்கும் மக்களில் பெரும்பான்மையானவர்கள் பொது மக்களுடன் ஒற்றுமையுடன் வாக்களித்துள்ளனர் - என்றார். (ஏ)

# வெடிக்காத நிலையில் குண்டு மீட்பு

கிளிநொச்சி, ஓக.11

பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள காணியொன்றுக்குள் இருந்து வெடிக்காத நிலையில் ஆர்.பி.ஜி ரக குண்டு மீட்கப்பட்டுள்ளது.

பளைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்தே மேற்படி குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-113)

# "சைனா" கட்டடத்தால் கிளம்பியது சர்ச்சை


கொழும்பு, ஓக.11

இலங்கை கூகுள் வரைபடத்தில் 'CHINA' என்று எழுதப்பட்டுள்ள பிரதேசம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பலவாறு விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

இந்த வரைபடத்தில் உள்ள கட்டடமானது அம்பாந்தோட்டை - மிரிஜ்ஜவில சூரியவெவ பிரதேசத்தில் சீனா - இலங்கை துறைமுக சேவை நிறுவனத்துக்குச் சொந்தமாகும்.

இலங்கையில் பல திட்டங்களை முன்னெடுத்துவரும் சீனா ஹார்பர் நிறுவனப் பொறியியலாளர்களால் இந்தக் கைவண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் தமது டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்திருப்பதாவது, இலங்கை - சீனாவுக்கு இடையிலான நட்புறவைக் குறிக்கும் வகையில் இந்த கட்டடக்காட்சி உள்ளது என்று தெரிவித்திருக்கிறது. (ஏ)



# 112 பேர் கைது

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 112 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் 45 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த 61பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் நாளை மாலிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ)

# தமிழருக்கு தீர்வு வழுங்குவதில் அரசு நழுவிச் செல்ல முடியாது

## சாணக்கியன் இடித்துரைப்பு

அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்ததன் ஊடாக, தமிழர்களுக்கான தீர்வுத் திட்டங்களை இலகுவாக வழங்க முடியும். அதிலிருந்து நழுவ முடியாது இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ள இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையில்லையென தமிழர்களை அரசு ஏமாற்றி வந்தது. இதனையே சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை சாட்டாகக் கூறிவந்தது. ஆனால் இனி அவ்வாறு ஏமாற்ற முடியாது. இலகுவாக புதிய அரசமைப்பு உருவாக்கங்களைச் செய்ய முடியும்.

இதேபோன்று தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான, சர்வதேசத்தின் அழுத்தங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். 2009ஆம் ஆண்டு சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய காலம் தற்போது வந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றும் மூன்றாவது சக்தியாகவே இருக்கின்றது. 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களுக்கு சர்வதேச சமூகத்துடன் இணைந்து அழுத்தங்களை வழங்கி அதற்கான தீர்வை இலங்கை வழங்க வேண்டும். கடந்த அரசில் ஜனாதிபதியும், பிரதமரும் வேறுவேறு திசையில் இருந்தனர். ஆனால் தற்போது சகோதரர்கள் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருக்கின்றனர். தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கு இதனைவிட நல்லதொரு சந்தர்ப்பம் வேறு அமையாது என்றார். (ம-க)

# சொத்து விவரங்களை தருமாறு புதிய எம்.பிக்களுக்கு உத்தரவு!

கொழும்பு, ஓக.11

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் சொத்து விவரங்கள் பற்றிய தகவல்களை நாடாளுமன்றில் அமர்வதற்கு முன் சமர்ப்பிக்குமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவர்கள் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு நேற்றுத் தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல வேட்பாளர்கள் ஏற்கனவே தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சொத்து விவரங்களை இன்னும் சமர்ப்பிக்காத மீதமுள்ள உறுப்பினர்கள், இந்த செயல்முறையை விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மேலும், பொதுத் தேர்தலில் வெற்றிபெறாத வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கான காலக்கெடு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அமைச்சுகளுக்குப் போட்டி அதிருப்தியில் கோத்தாபய

கொழும்பு, ஓக. 11

புதிய அரசில் அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ளும் நோக்கில் கட்சியின் பிரபல உறுப்பினர்கள் மற்றும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற சில வேட்பாளர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் காரணமாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடும் அதிருப்தியில் உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பல்வேறு உபாயங்களைக் கையாண்டு மறைமுகமாகவும் நேரடியாகவும் இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்படுதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அமைச்சு பதவிகளை கேட்ட தரப்பினரிடம் 'நாட்டுக்கு சேவையாற்ற அமைச்சுப் பதவி அவசியமா?' என ஜனாதிபதி கேள்வி எழும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதவி மற்றும் வரப்பிரசாதங்களை எதிர்பார்த்து அரசியலுக்கு வரும் தரப்பினரால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்று தெரிவித்துள்ள கோத்தாபய பதவிகளை எதிர்பாராமல் நாட்டுக்காக சேவையாற்ற வரும் தரப்பினரே எனக்குத் தேவை என்றும் தெரிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது. (ம)

# எதிர்கால ஆபத்தை உணர்ந்து ஒருமித்துச் செயற்பட வேண்டும்

## சுட்டிக்காட்டுகின்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன்

**யாழ்ப்பாணம், ஓக. 11**

**எதிர்கால ஆபத்தை உணர்ந்து செயற்பட வேண்டிய மிக முக்கிய கால கட்டத்தில் அனைவரும் பொறுப்போடு ஒருமித்துச் செயற்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் இணை ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி வடக்கு கிழக்கில் ஐம்பத்தி இரண்டாயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் ஒரு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பெற்றுள்ளது.

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை பெற்றுக்கொள்வதிலும் போரால் ஏற்படுத்தப்பட்ட நில ஆக்கிரமிப்புக்கள், வடக்கு கிழக்கில் பௌத்த சிங்கள மயமாக்கல் தமிழ் மக்களின் தொன்மைகள் அழிப்பு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை ஆகிய விடயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையாளத் தவறிய காரணத்தால் இவற்றையும் வினைத்திறனுடன் கையாளக் கூடிய புதிய தலைமை தேவை என்கிற கருத்து கடந்த சில ஆண்டுகளாக மக்கள் மத்தியில் வளர்ச்சியுற்று வந்தது.

இதன் விளைவாகவே இவற்றை வினைத்திறனுடன் கையாள்வதற்கான மாற்றுத் தலைமையாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உதயமானது.

நாமும் எமது எதிர்காலசந்ததியும் எமது சொந்த அடையாளங்களுடனும் அனைத்து உரிமைகளுடனும் வாழ்வதற்குத் தொடர்ந்தும் நாமே போராட வேண்டியுள்ளோம்.

எனவே தமிழ்த் தேசிய உணர்வு என்பது எமது மக்கள் மத்தியில் வலிமையாக இருக்க வேண்டும். அதன் மூலமே தமிழ்த் தேசிய இனத்துக்கான தீர்வு சாத்தியமாகும். இலங்கையின் ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய உணர்வை நீர்த்துப் போகச் செய்வதற்குப் பல முனைகளில் திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

இதன் முக்கிய வடிவமாக எமது மக்கள் மத்தியில் இருக்கும் தமது ஒரு சில முகவர்களையும் அரசைச் சார்ந்து தம்மை வளர்த்துக் கொள்ள முனையும் சிலரையும் பதவிகள், அதிகாரங்களைக் கொடுத்து தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தமிழ்த் தேசிய உணர்வை நீர்த்துப் போகச் செய்யும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றனர்.

இவர்களுடைய இந்த சதித் தனங்களைப் புரிந்துகொள்ளாத எமது மக்களின் ஒரு பகுதியினர் அவர்களை ஆதரிக்க முற்படுவது ஆபத்தான விடயமாகும். ஏறத்தாள 45ஆண்டுகளுக்குப் பின்னால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி யாழ் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளதுடன் அரச பங்காளிக் கட்சிகளும் வடக்கு கிழக்கில் பல ஆசனங்களைப் பெற்றுள்ளன. இவை தீர்வு நோக்கிய எமது போராட்டத்தை மிகவும் பலவீனப்படுத்தக் கூடிய அபாயத்தைக் கொண்டுள்ளன.

இந்த விடயத்தில் மக்கள் விழிப்புணர்வு பெறவேண்டும் என்பதுடன் அடுத்து வரும் காலங்களில் இத்தகைய தவறுகள் நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும். மேற்கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். எமது போராட்டத்தை வலிமையுடன் சரியான திசைவழியில் எடுத்துச் செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். (த-20)

# சுரேனுக்கு ஆசனம் வழங்க தெற்கில் கடும் எதிர்ப்பலை

கொழும்பு, ஓக. 11

பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கலாநிதி சுரேன் ராகவன் இரட்டை குடியுரிமை பெற்றவர் என சிங்கள பொது அமைப்புகள் ஒன்றியத்தின் உறுப்பினர் அளுத்கம இந்திரரதன தேரர் தெரிவித்துள்ளார். சுரேனுக்கு ஆசனம் வழங்கவும் அவர் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளார்.

சுரேன் ராகவன் இரட்டை குடியுரிமை பெற்றவர் என்று எமக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நாங்கள் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். அத்துடன் அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் ராஜபக்ச குடும்பத்தையும் விமர்சித்துள்ளார். அவரது குடியுரிமை பற்றி தேர்தல் ஆணைக்குழு ஆராயும் என நாங்கள் நினைக்கின்றோம் என்றார். (ம)

# போலி நாணயத்தாள் மாற்ற முற்பட்ட பெண் கைதானார்

யாழ்ப்பாணம், ஓக. 11

போலி நாணயத்தாள்களை வங்கியில் மாற்ற முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் அச்சுவேலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில் நேற்றுக்காலை ஆயிரம் ரூபா 3 போலி நாணயத்தாள்களை மாற்றமுற்பட்ட போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்தவர்.

அவரிடம் விசாரணை நடக்கின்றது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

# சந்திரகுமார் வெளியேறிய பின்னும் ஈ.பி.டி.பி. வன்னியில் வெற்றிநடை

## அவர் சவாலே அல்லர் என்றும் கூறுகின்றார் சிறீரங்கேஸ்வரன்

கொடிகாமம், ஓக. 11

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிலிருந்து வெளியேறிய முருகேசு சந்திரகுமார் தமது கட்சிக்குச் சவாலானவர் அல்லர்.

அவரது வெளியேற்றத்தின் பின்னர் வன்னி நிலப்பரப்பில் தமது கட்சி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்து முன்னோக்கிச் செல்கின்றது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி நிர்வாக செயலாளர் ஐ.சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியம் பேசும் கட்சியிலிருந்து பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்த நிலையிலும் பலர் தமது விருப்பு வாக்குகளை அரைவாசியாகவும் இழந்துள்ளனர்.

ஆனால் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கடந்த தேர்தலில் ஓர் ஆசனத்தைப் பெற்றிருந்த நிலையில் மக்கள் எமது கட்சி மீது வைத்திருந்த நம்பிக்கையின் பயனாக வன்னி நிலப்பரப்பில் எமது கட்சி ஓர் ஆசனத்தை பெற்று காலூன்றி உள்ளது.

தமிழ்த் தேசியத்தில் பலரை உருவாக்கிய பருத்தித்துறை இன்று போலித் தமிழ்த் தேசியவாதிகளால் தென்னிலங்கை கட்சிகளின் வசம் சென்றுள்ளது.

நல்லாட்சி அரசில் வாக்களித்த மக்களைத் திருப்திப்படுத்தாமல் விட்டதன் விளைவினாலேயே மக்கள் அபிவிருத்தியுடன் அரசியல் தீர்வைக் கொண்டுள்ள கட்சிகள் பக்கம் இன்று அணிதிரள ஆரம்பித்துவிட்டனர்.என்றார். (159)

# மயங்கி வீழ்ந்து படுகாயம்

வீதியில் பயணித்த வயோதிபர் மயங்கி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கொடிகாமம் ஏ9 வீதி இராமாவில் பகுதியில் அவர் நேற்று மாலை 5.30 மணியளவில் மயங்கி வீழ்ந்து தலையில் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

# ஆபாச 'மெசேச்' அனுப்பிய இளைஞரை புரட்டிஎடுத்த பெண்ணின் சகோதரர்கள்

வவுனியா.ஆக.11

தமது சகோதரிக்கு ஆபாச 'மெசேச்' அனுப்பியதால் பெண்ணின் சகோதரர்கள் அந்த நபரைத் தேடிப்பிடித்து கடுமையாகத் தாக்கிவிட்டு வீதியில் தள்ளிவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியா குடியிருப்பு பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அந்த இளைஞரைத் தாக்கிவிட்டு இனிமல் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்றும் எச்சரித்து அனுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)



**அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது கடற்கரைப்பகுதியில் டொல்பின் மீன் இறந்த நிலையில் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது. உரிய அதிகாரிகள் குறித்த மீன் தொடர்பில் ஆய்வு செய்தனர்.**

# 200 கிராம் கஞ்சா வைத்திருந்தனரென கிளிநொச்சியில் இருவர் கைது

கிளிநொச்சி, ஓக. 11

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் 200 கிராம் கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தமக்குக் கிடைத்த தகவலின் படி கிளிநொச்சி பொலிஸ் நிலைய மது ஒளிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொ.ப சதுரங்க தலைமையிலான குழுவினர் அவர்களைக் கைதுசெய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

# அதிகளவு மணல் அகழ்வால் கடல் நீர் உட்புகும் அபாயம்

## உடன் தடுத்து நிறுத்துமாறு தென்மராட்சி மக்கள் கோரிக்கை

**கொடிகாமம், ஓக.11**

**தென்மராட்சி கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் அதிகளவு மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமையால், கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கெற்பேலி கடற்கரை துறைமுகப் பகுதியிலேயே இவ்வாறு மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது.

தொடர்ந்து மணல் அகழ்வதால் பயன்தரு பனை மரங்களும் அழிக்கப்படுகின்றன என மக்கள் கவலை வெளியிட்டனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த வருடம் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வரும் நிலையில் நேற்றைய தினமும் சொந்தமாக காணி வைத்திருப்பவர்களும் வேறு நபர்களும் மணல் அகழ்வில் ஈடுபட்டனர். மணல் அகழ்வில் ஈடுபடுவோர் மீது வழக்குப் பதிவு செய்ய எமக்குப் பயமாக இருக்கிறது. ஏனெனில் கடந்த வருடம் மணல் அகழ்வுப் பிரச்சினை காரணமாக வயோதிபர் ஒருவர் ஈட்டியால் குத்திக் கொலைசெய்யப்பட்டார். இதனால் இது தொடர்பில் தெரியப்படுத்தவும், முறைப்பாடுகளை வழங்குவதற்கும் தயக்கமாக உள்ளது. மணல் தொடர்ச்சியாக அகழப்படுவதால், எமது பனை வளம் அழிவதோடு இனிவரும் மழை காலத்தில் கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகும் அபாயம் உள்ளது

எனவே எமது வளங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்றனர்.



(ஐ-159)

## செல்வச்சந்நிதியானுக்கு 19 இல் கொடியேற்றம்




வடமராட்சி, ஓக. 11

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 15 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 1 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மருத்துவ முகாம்



சாவகச்சேரி, ஓக. 11

ஓய்வூதிய தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நேற்று நடத்தப்பட்டது.

வங்கிக் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்வில் 300 இற்கு மேற்பட்ட ஓய்வூதியர்கள் கலந்துகொண்டனர். இவர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளை மருத்துவர் குமணன் மேற்கொண்டார். (ஐ-9)

## முன்மாதிரியான திருமண ஜோடி



கொழும்பு, ஓக. 11

திருமண நாள் அன்று வீதியோரங்களில் வசிக்கும் யாசகர்களுக்கு உணவளித்த தம்பதிகளின் நெகிழ்ச்சி சம்பவம் மாத்தறையில் நடந்துள்ளது.

இது தொடர்பான படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன. திருமண ஜோடிக்குப் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

தமது திருமண நாள் அன்று ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, வீதியோரங்களில் வசிக்கும் யாசகர்களுக்கு அவர்கள் உணவளித்துள்ளனர். (க-11)

## சிறப்புச் சொற்பொழிவு

சிறுப்பிட்டி, ஓக.11

யாழ்ப்பாணம் நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான அலங்காரத் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

அதன்படி இன்று செவ்வாய்க்கிழமை சைவப்புலவர் பிரசங்க பூஷணம் கந்த சத்தியதாசன் "அன்பே சிவம்" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொள்ளையர்களால் தாக்கப்பட்டு முதியவர் படுகாயம்

சாவகச்சேரி, ஓக. 11

திருடர்களின் தாக்குதலுக்கு இலக்கான முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கொடிகாமம் நாவலடியில் இடம்பெற்றது.

கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்களைத் தாக்கிய குறித்த முதியவர் அயலவர்களின் உதவியைக் கோரியுள்ளார். அயலவர்கள் ஓடி வரவே திருடர்கள் முதியவரைத் தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

காயமடைந்த முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மோதிரம், சங்கிலி, 65000 ரூபா பணம் என்பவற்றை அவர்கள் கொள்ளையடித்துள்ளனர். (ஐ-9,159,26)

## தரவுத் தளத்துக்கு 15ம் திகதிக்கு முன்னர் விண்ணபிக்கவும்

யாழ்ப்பாணம், ஓக. 11

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ள தேசிய கலைஞர் தரவு தளத்துக்கானவிண்ணப்பங்களை இதுவரை அனுப்பாத கலைஞர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட கலாசார அலுவலர் இ.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

கடந்த மாதம் இவ் தரவுத் தளத்துக்கு கலைஞர்களை விண்ணப்பிக்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் பிரதேச கலாசார அலுவலர்களினால் அறிவுறுத்தப்பட்ட போதும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு துறைசார் கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்கவில்லை. இதனால் இத் தரவுத்தளத்துக்கு விண்ணப்பிப்பதற்கான கால நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த தரவுத்தளத்துக்கு இசை, நடனம், வாத்தியம், ஜோதிடம், நாடகம் (தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம்) சினிமா ஒளிப்பதிப்பு செய்தல், ஆடை நிர்மாணிப்பு, விளம்பரப்படுத்தல், ஓவியம், இலக்கியம், ஊடகம், கைவினை, கவிதை, நாடகப்பொருள் தயாரிப்பு, தற்காப்பு கலை,, சடங்குகள் கலை, உடற் பயிற்சி கலை, கிராமிய விளையாட்டு, ஜிம்னாஸ்டிக் கலை, வசியம், ஆயுர்வேதம், மெஜிக், மைலா, அச்சுக்கலை, சமையல், கட்டடக்கலை, தளபாட தயாரிப்பு, நில அலங்கரிப்பு, அழகுக்கலை, கிராபிக்ஸ் கலை, நாட்டார்கலை ஆகிய பல் துறைசார் கலைஞர்களும் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

கலைஞர்கள் பிரதேச செயலகப் பிரிவு கலாசார அலுவலர் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்று 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-39)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கூட்டமைப்பு = கூட்டுப்பொறுப்பு+ கூட்டு முடிவு

துண்டங்களாகச் சிதறிக்கிடந்த தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரளவைத்து, தமிழர்களின் உரிமைக்குரலை ஜனநாயக வழியில் பலமாக வெளிப்படுத்தவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர் தாயகத்தில் பேரினவாதத்தால் நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்கு எதிராக கூட்டமைப்பு எழுப்பிய குரல் சர்வதேசம் வரை சென்றடைந்தது. தனியே ஒரு கட்சியினது குரலாக இல்லாமல் , ஒட்டுமொத்த தமிழினத்தினதும் கூட்டுக் குரலாகவே கூட்டமைப்பு வெளிப்படுத்திய விடயங்களைச் சர்வதேசம் கவனத்தில் எடுத்தது. அதனாலேயே இலங்கைக்கு வரும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் அரச பிரதிநிதிகளைச் சந்திப்பது போன்றே கூட்டமைப்பினரையும் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். எப்படி அம்மை, அப்பனை சுற்றி வந்தாலே முழு உலகத்தையும் சுற்றியமைக்கு சமமென பிள்ளையார் நினைத்தாரோ, அதேபோன்று கூட்டமைப்பினரைச் சந்தித்தாலே தமிழ்மக்கள் அனைவரையும் சந்தித்தமைக்குச் சமமென்ற நோக்குநிலை இன்னமும் சர்வதேசத்திடம் மாறவில்லை.

இருப்பினும் இனிமேல் அந்த நிலை மாற்றமடைவதற்கான அறிகுறிகள் பலமாகவே தென்படத்தொடங்கிவிட்டன. இம்முறை தேர்தலில் கூட்டமைப்புத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் தமிழர் தாயகத்தில் பெற்ற வாக்குகள் மாத்திரமல்லாது, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சம்பவங்களும் அத்தகைய நிலையை உண்டுபண்ணுவதாகவே தோன்றுகின்றது. என்றுமே இல்லாத வகையில் கூட்டமைப்பு பொதுத்தேர்தலில் மரண அடி வாங்கியிருக்கிறது. ஐ.தே.க போல படுபாதாளத்தில் விழாமல் தப்பித்துக்கொண்ட போதிலும், அடுத்தடுத்த தேர்தல்களில் அத்தகைய நிலை ஏற்பட்டு, கூட்டமைப்பு என்ற ஒரு கட்சி இருந்ததையே பூதக்கண்ணாடி வைத்துத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தேர்தலில் இறங்குமுகம் எதனால் ஏற்பட்டது ? அதனை எவ்வாறு சீர் செய்யலாம் ? என்னென்ன மாற்றங்களைச் செய்யவேண்டும் ? என ஆராய்ந்து , அதற்குரிய வழிவகைகளை மேற்கொண்டு, இதுவரை செய்த பிழைகளைத் திருத்துவதன் ஊடாகவே மீண்டும் கூட்டமைப்பை மீண்டெழச் செய்யமுடியும். ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு, முன்னரைக் காட்டிலும் மோசமான பாதையில் கூட்டமைப்பை பயணப்படச் செய்வதற்கான வேலைகளில் சிலர் ஈடுபடத்தொடங்கிவிட்டனர். தேர்தல் முடிந்த கையோடு , கூட்டமைப்பு சார்ந்த இருவர் நடத்திய ஊடக சந்திப்புகளில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் அதனையே கோடு காட்டி நிற்கின்றன. வரலாற்றில் இல்லாத அளவுக்கு கூட்டமைப்பு சரிவைச் சந்தித்தமைக்குக் காரணியாக இருக்கும் ஒருவர் , தன்மீது பழி வரக்கூடாது என்பதற்காக அவசர அவசரமாக அந்தப் பழியை கட்சித் தலைமை மீதும், ஊடகங்கள் மீதும் போட்டுவிட்டு தப்பிக்க நினைக்கிறார். அவருக்கு துணையாக இருக்கும் மற்றையவரோ, தலைமைப்பதவியைத் தந்தால் பொறுப்பேற்கத் தயார் என்று பொறுப்பற்றவிதத்தில் கருத்துரைக்கிறார். ஒரு வெற்றியோ, ஒரு தோல்வியோ எல்லாவற்றையும் தீர்மானிப்பதில்லை. தாம் வென்றுவிட்டதாலும், கட்சியின் தலைவர் தோற்றுவிட்டதாலும், அவரை விடவும் தமக்கே தலைமைப் பொறுப்புக்கான தகுதி அதிகம் என அவர்கள் நினைப்பார்களாயின் அதைவிட அடிமுட்டாள்த்தனம் வேறொன்றுமில்லை.

இத்தகையை நிலையில், கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தரோ, பங்காளிக் கட்சிகளிடம் எதுவுமே கலந்தாலோசிக்காது தன்னிச்சையாக தேசியப் பட்டியல் ஆசனத்துக்கான தெரிவை மேற்கொண்டமை மேலும் முரண்பாட்டை உச்சத்துக்குக் கொண்டுபோயிருக்கிறது. கூட்டமைப்பு என்ற பதமே கூடி முடிவெடுத்தலையும், கூட்டுப் பொறுப்பையும் உணர்த்தி நிற்கின்றது. ஆனால் அதை மிதித்துக் கொண்டு தாம் மட்டுமே கூட்டமைப்புக்கு உரிமையாளர்கள் போல சம்பந்தரும், சுமந்திரனும் நடந்துகொள்வது கூட்டமைப்பை எந்த நோக்கத்துக்காக புலிகள் உருவாக்கினார்களோ, அந்த நோக்கத்தைச் சிதைத்து, தனியே வாக்கு அரசியலுக்கான கட்சியாக மட்டுமே அதனை அடையாளப்படுத்திவிடும். அதனைச் 'சம்பந்தப்பட்டவர்கள்' கொஞ்சமேனும் உணராவிட்டால், அடுத்தடுத்த தேர்தல்களில் மக்கள் உணர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர்களை கண்டறிக

### கொழும்பு பேராயர் இல்லம் அரசுக்கு அழுத்தம்

**கொழும்பு,ஓக.11**

**கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதலுக்குக் காரணமான குற்றவாளிகளைக் கண்டறிவதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொழும்பு பேராயர் இல்லம் மீண்டும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.**

பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட் தந்தை கலாநிதி கெமிலஸ் பெர்னாண்டோ விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பு மூலம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதிய அரசு தெரிவானமைக்காக பேராயர் இல்லம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அரசின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு அமைய அரசு செயற்படும் என நாம் நம்புகின்றோம். அதேபோல் நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு செல்ல, சகல நடவடிக்கைகளையும் புதிய அரசு முன்னெடுக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற மிகவும் மோசமான ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி, தாக்குதலின் பின்னணியில் உள்ள குற்றவாளிகளைக் கண்டறிந்து, யார் இந்தச் செயற்பாடுகளில் தொடர்புபட்டனரோ அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கும் விதத்தில் அரசு துரிதமாகச் செயற்பட வேண்டும் என்பதே கரு தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையினதும், கிறிஸ்தவ மக்களினதும் ஒரே எதிர்பார்ப்பாக உள்ளது. எனவே அரசு அதனை நிறைவேற்ற வேண்டும் - என்றுள்ளது. (க)

# நாட்டை முன்னேற்ற எதிரணியும் அவசியம்

### கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு,ஓக.11



நாட்டை முன்நோக்கி நகர்த்துவதற்கு ஸ்திரமான அரசைப் போன்றே, வலுவான எதிரணியொன்றும் மிகவும் அவசியம். நாடாளுமன்றுக்கு தெரிவாகியிருக்கும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கொள்கைகளின் அடிப்படையில் ஒன்றுபடுவதன் ஊடாகவே வலுவான எதிர்த் தரப்பொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றுக்குத் தெரிவாகியிருக்கும் புது முகங்களுக்கு தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாக வாழ்த்துத் தெரிவித்துள்ள அவர், தமது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது

2020 ஓகஸ்ட் 5 பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசு அமைக்கக்கூடிய மக்கள் ஆணை யை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுள்ளது.

அதேவேளை சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படும். எனினும் எந்தவொரு கட்சியாக இருப்பினும், அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதென்பது அந்தக் கட்சிக்கு அதிகூடிய அதிகாரங்களை வழங்குவதாகவே அமையும். அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என கடந்த காலத்தில் அரசியல் அவதானிகள் பலரும் எச்சரித்து வந்திருக்கின்றனர்.

எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் தமது செயற்பாடுகளின் ஊடாக சிறந்ததொரு அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், நாடாளுமன்றம் தொடர்பில் மக்கள் கொண்டிருக்கின்ற அபிப்பிராயத்தை மேம்படுத்துவதற்கும் இது மிகச்சிறந்த வாய்ப்பாகும். 'கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்' என்று அழைக்கப்படுவதற்குரிய தகுதியையும், மதிப்பையும் அவர்கள் சம்பாதித்துக்கொள்ள வேண்டும்.

வலுவான அரசை அமைப்பதற்கு மக்கள் தெளிவான ஆணையொன்றை வழங்கியிருக்கின்றனர். நாட்டை முன்நோக்கி நகர்த்துவதற்கு ஸ்திரமான அரசைப் போன்றே, வலுவான எதிர்க்கட்சியும் இருக்க வேண்டும். தனிப்பட்ட வசதி வாய்ப்புக்களை நாடாது கொள்கைகளின் அடிப்படையில் ஒன்றுபடுவதன் ஊடாகவே மிகவும் உறுதியான எதிர்த் தரப்பொன்றைக் கட்டமைக்க முடியும்-என்றுள்ளது. (க)

## சபாநாயகர் பதவிக்கு யாப்பா அபேவர்தன?

கொழும்பு,ஓக.11

ஒன்பதாவது நாடாளுமன்ற சபாநாயகர் பதவிக்கு மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், 80 ஆயிரத்து 595 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றின் கன்னி அமர்வு, எதிர்வரும் 20 ஆம் திகதி கூடவுள்ள நிலையில் இவர் புதிய சபாநாயகராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

74 வயதான மஹிந்த யாப்பா அபேவர்தன 1983 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## 106 வயது மூதாட்டி உயிரிழப்பு

தென்மராட்சி,ஓக.11

106 வயது வரை ஆரோக்கியத்துடன் உயிர் வாழ்ந்த மூதாட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

மந்துவில் கிழக்கு கொடிகாமப் பகுதியில் வசித்து வந்த சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை என்பவரே உயிரிழந்தார்.

இவர் இயற்கை உணவுகளை அதிகம் விரும்பி உண்டு வந்த ஒருவராவார். நோய் அற்று ஆரோக்கியமாகவே இறுதி வரை வாழ்ந்து வந்துள்ளார் என்று அறியமுடிகிறது.

மூதாட்டியின் கணவர் 1998 ஆம் ஆண்டு உயிரிழந்தார். இவருக்கு ஒரு மகளும், இரண்டு பேரப்பிள்ளைகளும், மூன்று பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர். (க-159)

# முன்பள்ளிகள் திறக்கப்படாமை குறித்து பெற்றோர்கள் கவலை

சாவகச்சேரி, ஓக.11

**பாடசாலைகள் அனைத்தும் நேற்று மீண்டும் திறக்கப்பட்ட நிலையில், முன்பள்ளிகள் திறக்கப்படாமை குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர்.**

முன்பள்ளிகள் மூடப்பட்டு ஆறு மாதங்களாகியும் அவை மீண்டும் திறக்கப்படாததால் சிறார்களுக்கான அடிப்படைக்கல்வி அறிவு ஊட்டப்படாத நிலை ஏற்படுகிறது. இதனால் முன்பள்ளிகளைத் திறக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பெற்றோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கல்விப்புல அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபோது "மத்திய கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம், கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்க முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று இல்லையென்றாலும், நாட்டில் இன்னமும் கொரோனாத் தொற்று அபாயம் நீங்கவில்லை. இருப்பினும் மாகாண, மாவட்ட, பிரதேச ரீதியில் நடத்தப்படும் சுகாதார திணைக்க ளத்தினருடனான கூட்டங்க ளின் பின்னரே முன்பள்ளிகளைத்திறப்பது தொடர்பாக முடிவு செய்யப்படும். மேலும். முன்பள்ளிகள் எந்த நேரமும் திறக்கக் கூடிய நிலையில் அதன் சுற்றாடலில் தொற்று நீக்கி விசிறப்பட்டு சிறார்கள் திறந்த நிலையில் கற்றலை மேற்கொள்ள ஆயத்தமாக இருக்குமாறு முன்பள்ளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மாகாண, மாவட்ட, பிரதேச நிலையில் நடத்தப்படும், உயர்மட்டக் கூட்டங்களின் பின்னரே முன்பள்ளிகள் திறப்பது தொடர்பாக அறிவிக்கப்படும்" என்றனர்.

(ஜ-9)

# இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.11

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விளையாட்டுத் துறை சார்ந்த பட்டப்படிப்பியல் நுழைவுப் பரீட்சையில் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு சப்ரகமுவ பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பொருளியல் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள இப் பரீட்சையில் தோற்றுறவுள்ள அனைத்து மாணவர்களையும் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

சுகாதார நலன்கருதி அனைவரும் முகக்கவசம் அணிந்து வருகைதருவதுடன் மேலதிக தகவல்களைப் பெற 0770412562,0775154551 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# தேர்தல் செலவுகளை வெளியிட்டார் ரஞ்சன்

கொழும்பு, ஓக.11



பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ரஞ்சன் ராமநாயக்க, தனது தேர்தல் செலவுகள் தொடர்பான விபரங்களை வெளியிட்டுள்ளார்.

தேர்தலுக்காக 55 லட்சத்து 65 ஆயிரம் ரூபா செலவானது. அதில் 41 லட்சம் ரூபா நெருக்கமானவர்கள் வழங்கிய நன்கொடை. 9 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவே எனது தனிப்பட்ட பணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்டுள்ள தேர்தல் செலவுகளில் அதிகமான பணம் தொலைக்காட்சி விளம்பரங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. தொலைக்காட்சி விளம்பரத்துக்காக அவர் 33 லட்சம் ரூபா செலவு செய்துள்ளார். அத்துடன் சமூக வலைத்தளமான பேஸ்புக்கிலும் விளம்பரம் செய்திருந்தார்.

இது தொடர்பான விபரங்களை ரஞ்சன் ராமநாயக்க தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

(க)

# நரியிட்டான் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக.11.

மல்லாகம், நரியிட்டான் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்தவர்கள் வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் நேற்று இரவு நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர்கொண்ட குழுவே தாக்குதல் நடத்தியுள்ளது. தண்ணீர் கேட்டு வீட்டுக்குச் சென்ற நால்வர், வீட்டிலிருந்த தந்தை மற்றும் இரு மகன்களை இரும்புக் கம்பியால் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர் அளவெட்டியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை என்றும், இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணை கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெல்லிப்பளைப்பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-25)

# வெள்ளை வான் கடத்தல் ராஜித, ரூமிக்கு அழைப்பு

கொழும்பு, ஓக.11




முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரூமி மொஹமட் ஆகியோரை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடுசெய்து, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியிடப்பட்டன.

இது தொடர்பிலான விசாரணைகளுக்காகவே இருவரும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(க)

# 600 தொன் நெல் கொள்வனவு



கொழும்பு, ஓக.11

சிறுபோக அறுவடையில் 600 தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப் படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக அம்பாறை மாவட்டத்தில் அதிக அளவிலான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் ஜட்டால் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 400 தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, எதிர்வரும் வாரம் முதல் ஈரப்பதனுடனான நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

ஈரப்பதனுடனான நெல் ஒரு கிலோ கிராமுக்கு 44 ரூபா விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# தமிழர் பகுதிகளில் மீளவும் அபிவிருத்தித்திட்டங்கள்

## பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஓக.11

தமிழர் பகுதிகளில் அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு துரிதப்படுத்தப்படும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இந்தியாவின் புரொன்ட் லைன் சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எனது முன்னைய ஆட்சியின்போது வடபகுதியில் கடுமையான சூழ்நிலைகளின் கீழ் பெருமளவு விடயங்களைச் செய்தேன். துரதிஸ்டவசமாக கடந்த சில வருடங்களாக குழப்பப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் முன்னெடுத்து அவற்றை துரிதப்படுத்தவுள்ளோம்.

இனம், கலாசார பின்னணிகளை கடந்து எங்கள் அரசாங்கம் நாட்டின் அனைத்துப் பிரஜைகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

வாழ்வாதாரம், விவசாயத்



துக்கான நீர்ப்பாசனம், ஏற்றுமதிகளை தரமுயர்த்துதல் கல்வி மற்றும் மருத்துவமனைகளின் வசதிகள் தொடர்பில் முன்னுரிமை அளித்து அபிவிருத்தி செய்யப்படும் என்றார்.

(ஐ)

# குடியுரிமையை இரத்து செய்துவிட்டேன்

சுரேன் தெரிவிப்பு

கனேடிய குடியுரிமையை ஆரம்பத்தில் கொண்டிருந்த போதிலும் அதனை இரத்துச் செய்துவிட்டேன் என்று, நாடாளுமன்றுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் மூலமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அவர் இரட்டை குடியுரிமை கொண்டவர் என்று நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது பற்றிக் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

(து)

## நல்லூரில் இன்று

# அருணகிரிநாதர் உற்சவம்



மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

திருவண்ணாமலை பஞ்சபூத தலங்களில் ஒன்று திருவாவூரும் காஞ்சிபுரமும், பிருதிவித் தலம் திருவானைக்கா அப்புத்தலம் திருவண்ணாமலை தேயுத்தலம் என்பது இங்குள்ள பாறைகளை நிலநூலோர் நெருப்புத்தன்மையுள்ள பாறைகள் என்று ஆராய்ந்து சொல்வதனாலும் தெளிவாகின்றது.

மேலும் ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு விஷேடம் உண்டு. திருவாரூர் பிறக்க முத்தி தரும் தலம். காசி இறக்க முத்தி தரும் தலம், சிதம்பரம் தரிசிக்க முத்தி தரும் தலம், திருவண்ணாமலையோ நினைத்த அளவிலேயே முத்தி தரும் தலமாகும். இத்தகைய திருவண்ணாமலையில் சமீப காலத்தில் ரமண மகாரிஷிகள், சேஷாந்திரி சுவாமிகள் ஆகியோர் வாழ்ந்திருந்தனர்.

அதுபோல 600 ஆண்டுகளுக்கு முன்பு அருணகிரிநாதர் என்னும் சிறந்த ஓர் அருளாளர் வாழ்ந்திருந்தார். செந்தமிழ் தெய்வமாகிய திருமுருகனின் திருவருளை பெற்று திருப்புகழ் எனும் தெய்வீக நலம் செறிந்த அருமையான பாடல்களைப் பாடியவர் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதரின் அருமை பெருமைகளையும் அவர் அருளிச் செய்த திருப்புகழ் பாடல்களையும் பற்றி அறியாதவர் எவரும் இரார்.

அருணகிரிநாதர் தமது சிறுவயதில் இன்பகத் துறையில் உழன்றார் என்று அவர்களுடைய பாடல்களால் தெரிகின்றது. இருப்பினும் அவர் முன்னைப் பிறவிகளில் செய்த தவங்களின் பயனாக முருகப்பெருமான் தடுத்து ஆள கொள்ளப்பெற்றார். அருணகிரிநாதர் இருபாசித்தர் எனும் வகையைச் சேர்ந்தவராவார். அவருக்கு திடீரென்று முருகனின் திருவருள் கிடைத்தது இதனை அவரே

> **" அறிவும் அறிவுத்தத்துவமும்**
> **அபரித வித்தைகளும்**
> **அறியென இமைப்பொழுதில்**
> **வாழ்விக்க வேதியன்"**

என்று தமது திருவகுப்பில் 12ம் பாடலில் முருகனைப் போற்றியிருப்பதால் தெரிகின்றது. முருகப் பெருமான் இவருக்கு இருந்த நோய்களைத் தீர்த்து திருவண்ணாமலை கோயில் கோபுரத்தினின்று வாழ்ந்து தற்கொலை செய்து கொள்ள முயன்ற இவரை தடுத்து காத்து ஆட்கொண்டதுடன் "முத்தைத் திருப்பத்தித் திருநகை...." என தொடங்கும் திருப்புகழ் வரியை எடுத்துக் கொடுத்து தம்மை இவர் எல்லாத் தலங்களிற்கும் சென்று பாடி வழிபட்டு வருமாறு அருள் செய்தான்.

முருகப்பெருமான் இவருக்கு வயலூர், விராலிமலை, பழனி, திருச்செந்தூர் முதலிய பற்பல தலங்களில் தனிச்சிறப்பாக அருள் செய்து கருணை புரிந்திருக்கிறார். அருணகிரிநாதரின் திருப்புகழ் சித்திர கவித்துவம் நிறைந்தது; வகை வகையான சந்த பேதங்கள் அமைத்து கேட்பதற்கே இனிமையான சப்த தலம் மிகுதியாகப் பெற்றது. அதனால் அவர் பாடிய திருப்புகழ் அவர் காலத்திலேயே நாடெங்கும் பரவி பெரிதும் போற்றப் பெற்றது. தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய எல்லா திசைகளிலும் திருப்புகழைப் போற்றி மகிழ்வித்தனர். முருகப்பெருமானை யான் எப்போதும் மறக்க மாட்டேன் என்று அருணகிரிநாதர் தமது திருப்புகழில் குறிப்பிடுகின்றார்.

திருப்புகழ் நம் செந்தமிழ் மொழியிலுள்ள கவிதை வகைகளிலேயே மிகவும் தனிச்சிறப்பான பெருமைகள் வாய்ந்தது. தாள நுட்பங்களும் சந்த பேதங்களும் மிக இனிமையான ஓசை நலன்களும் அழகிய பற்பல சொற்றொடர் அடுக்குகளையும் கொண்டது. அதனால் அவற்றில் மனதைப் பறிகொடுத்து முருக பக்தர்கள் அனைவரும் அதனைப் பாடிப் பாடி மகிழ்வர். திருப்புகழ் பாடி முருகனை வழிபடுவது மிகச் சிறந்த நாத உபாசனை ஆகும்.


**"வாக்கிற்கு அருணகிரிவாதவூரர் கனலில் தாக்கில் திருஞானசம்பந்தர் - நோக்கிற்கு நற்கீரர்தேவர், நயத்திற்குச் சுந்தரனார் சொற்குறுதிக்கு அப்பர் எனச்சொல்"**

என்பது போல் வாக்கு வன்மையில் அருணகிரிநாதர் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். அவருடைய அருள் வாக்குக்கு இணையான வாக்கு வேறு எதுவும் இல்லை என்பது பெரியோர்களின் கருத்து. அங்ஙணமே கருணைத் திறனிலும் அருணகிரிநாத பெருமானுக்கு இணையானவர் எவருமிலர்.

அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி திருவகுப்பு என்னும் நூல்களை இயற்றியுள்ளார். வேதாந்த சித்தாந்த சமரச ஞானியாகிய தாயுமான சுவாமிகள்

**"ஐயா அருணகிரி அப்பா உன்னைபோல மெய்யாக ஓர்சொல் விளம்பினார் யார்?**

என்று அருணகிரிநாதரை வியந்து புகழ்ந்து போற்றுகின்றார். இத்தகு அனுபூதியாளரிகை புகழ் மேன்மேலும் ஓங்குக. திருப்புகழ் பாடல்கள் எங்கும் பரவி வளர்க.



நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலய 17ஆம் நாள் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.



இன்று பதினெட்டாம் திருவிழா

## நல்லூரான் சிறப்பம்சம்

### காத்திடுவான் குமரன்

பச்சை மயில் மீது அமர்ந்திருக்கும்
பன்னிரு கை வேலவனே
பக்தர்களை காப்பதற்காக
நல்லையம்பதியில் கோயில் கொண்டிருக்கும்
சிங்கார வேலவனே
மயிலான வள்ளியை இடப்புறத்திலும்
குயிலான தேவயானை வலப்புறத்திலும் வீற்றிருக்க
வெற்றிவேலுடன் காட்சி தரும்
அலங்காரக் கந்தனே
எம் உறவுகளைக் காத்திட
பார்வதியின் மைந்தனே வருவாயா?

*க.மலர், திருநெல்வேலி, சிறுவர் இல்லம்.*

### நல்லூரை படிக்க வேண்டும்

நல்லூரைப் போலவே
நாடும் செழிக்க வேண்டும்
நாளை நமதாகவே
நல்லூரைப் படிக்க வேண்டும்

பொல்லாத போதையும்
புரியாத நாகரிகமும்
பூமிக்கு ஆகாதே
புரியுமே நல்லூரில்!
கல்லாத ஒருவனிடம்
கற்கலாம் நல்லூரில்
கடுந்தவம் புரிகிறான்
காதலாகிப் பாடுகிறான்
நில்லாதவற்றை நாமோ
நிலையென்று எண்ணியே
நினைப்பது தவறாகுமே
நல்லூரில் புரியுமே!

*கே.எஸ்.சிவஞானராஜா*

### நல்லைக் குமரா நம்மைக் காப்பாய்!

சிவனவன் நெற்றிக்கண் பொறிகளில் உதித்த பாலா
அவனியில் எங்கள் வாழ்வு அவலமாய் விளங்கலாமோ
எவரெமைக் காக்க வல்லார்? ஏந்தலே உன்னையன்றி
தவமிகு சித்தர் வாழ்ந்த நல்லையம் பதியின் நாதா!

*நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்*

### பாவங்கள் போக்கிடவே வா வா முருகா!

பச்சை மயில் வாகனனே வா வா முருகா
பாவங்கள் போக்கிடவே வா வா முருகா
பிறையாளன் திருமகனே வா வா முருகா
பீடு நடை போடுபவனே வா வா முருகா
புண்ணியங்கள் அழித்திடவே வா வா வா முருகா
பூவுலகைக் காத்திடவே வா வா முருகா

பெருகும் துன்பம் போக்கிடவே வா வா முருகா
பேதமையை ஒழிந்திடவே வா வா முருகா
பைந்தமிழ்க் குமரனே வா வா முருகா
பொன்னிற வடிவேலவனே வா வா முருகா
போகங்கள் அழிப்பவனே வா வா முருகா
பௌவியமாய் வணங்கிடுவோம் வா வா முருகா

*சி.மகாலட்சுமி,*
*கொக்குவில்.*



# கேரளா கோழிக்கோடு விமான விபத்து; பிரதமர் இரங்கல்

கொழும்பு, ஓக.11
இந்தியாவின் கேரளாவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விமான விபத்து குறித்து பிரதமர்மஹிந்தராஜபக்ஷ இரங்கல் வெளியிட்டுள்ளார்.
'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ் டுபாயில் இருந்து 184 பயணிகளுடன் இந்தியா சென்ற எயார் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம், கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.40 மணிக்கு கோழிக்கோடு கரிப்பூர் சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கிய வேளை விபத்தில் சிக்கியது. இதில் விமானம் இரண்டாகப் பிளந்து உடைந்தது. இந்த விபத்தில் 2 விமானிகள் உட்பட 20 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3)

# சைவமக்கள் முன்னணியால் பறிபோனது கூட்டமைப்பின் ஆசனம்

## குமுறுகிறார் சட்டத்தரணி டினேசன்

**மன்னார், ஓக. 11**
**நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஓர் ஆசனத்தை இழந்தமைக்குக் காரணம் மன்னார் குருக்கள் பேரவை உருவாக்கிய தேசிய சைவ மக்கள் முன்னணி என்னும் சுயேச்சைக் குழுவே இவ்வாறு தெரிவித்தார் சட்டத்தரணி செல்வராஜா டினேசன்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் சைவ பிரதிநிதியொருவர் மன்னார் மாவட்டத்திற்குத் தேவை என்று ஒரு சிலரின் உசுப்பேத்தலினால் மன்னார் குருக்கள் ஒருவரின் தலைமையில் மன்னார் சைவ மக்கள் முன்னணி என்று சுயேச்சைக் குழுவொன்று கோடரி சின்னத்தில் போட்டியிட்டு 2 ஆயிரத்து 500 வாக்குகளைப் பெற்றது. இதனால் கூட்டமைப்பின் வாக்குகள் பிரிக்கப்பட்டன.
மதப்பிளவுகளை மக்களிடம் விதைத்து சிலர் தமிழினத்தை பலவீனப்படுத்தி விட்டார்கள். வாக்குகள் சிதறிப் போனமையால், வன்னியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஓர் ஆசனத்தை இழந்துள்ளது. மதத்தை முன்னிறுத்துபவர்கள் எவருக்கும், தமது செயற்பாடுகளால் தமிழினம் பலவீனமடைந்து போவது புரிவதில்லை - என்றார். (ம-213)

# முற்போக்குக் கூட்டணிக்கு தேசியப்பட்டியல் வேண்டும்

## இராதாகிருஷ்ணனும் விடாப்பிடி

கண்டி, ஓக. 11
தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு தேசியப்பட்டியல் வழங்கப்படாவிட்டால் நிச்சயம் மாற்று நடவடிக்கையில் இறங்குவோம். மலையக மக்கள் முன்னணியும் முழுமையாக மறுசீரமைக்கப்படும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
ஹட்டனில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
2010, 2015ஆம் ஆண்டுகளில் ஆளுங்கட்சியில் இருந்துதான் தேர்தலில் போட்டியிட்டோம். இம்முறை எதிரணியில் இருந்து களமிறங்கினோம். கணிசமான அளவு வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதுதான் எமக்குக் கிடைத்த



பெரும் வெற்றியாகும். இந்த வெற்றியை மக்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். ஆளுங்கட்சி என்பதாலேயே மொட்டுக் கட்சிக்கு நுவரெலியாவில் வாக்குகள் அதிகரித்தன. மூவர் போட்டியிட்டோம், மூவரும் வெற்றிபெற்றோம். இதுதான் நூறுவீத வெற்றியாகும்.
அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுச் செல்வதை விடவும் அதிக ஆசனங்களைப் பெற்று நாடாளுமன்றம் செல்வதே சிறப்பு. அந்தவகையில் எமது அணியில் ஆறு எம்.பிக்கள் இருக்கின்றனர். தேசியப்படடியல் ஒன்றும் அவசியம். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவேண்டும். இல்லையேல் நி ச்சயம் மாற்று நடவடிக்கையில் இறங்குவோம் - என்றார். (ம)

# காடை பொரிக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்து சாதனை படைத்தார் சாய்ந்தமருது மாணவன்!

கொழும்பு, ஓக. 11
அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் அஸிஸ் முஹமட் இக்றாம் என்னும் மாணவன், காடைக் குஞ்சு பொரிக்கக்கூடிய இயந்திரத்தைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.
மின்சாரத்தின் மூலம் மிக எளிய முறையில் இயங்கக்கூடிய வகையில் இந்த இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரே தடவையில் சுமார் 50 காடைக்குஞ்சுகளை உற்பத்தி செய்யக்கூடிய வகையில் இந்த இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ம)



# கால்நடைகளுக்கு காதடையாளம் இடல்

காரைநகர்,ஓக.11
காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கால்நடைகளுக்கு காதடையாளம் இடும் பணி நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது.
காரைநகர் கால்நடை வைத்திய நிலையமும், பிரதேச செயலகமும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.
நேற்று ஜே42, ஜே43 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கால்நடைகளுக்கு காதடையாளம் இடப்பட்டன. எதிர்வரும் 14 ஆம் திகதி ஜே44 கிராம அலுவலர் பிரிவிலும், 17 ஆம் திகதி ஜே41,ஜே46 மற்றும் ஜே48 கிராம அலுவலர் பிரிவுகளிலும், 21 ஆம் திகதி ஜே47 கிராம அலுவலர் பிரிவிலும், 24 ஆம் திகதி ஜே40 கிராம அலுவலர் பிரிவிலும், 28 ஆம் திகதி ஜே45 கிராம அலுவலர் பிரிவிலும் இப்பணி இடம்பெறும்.
இச்செயற்பாட்டுக்கு அனைத்து பண்ணையாளர்களையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)





# குளவி கொட்டி 4 பேர் பாதிப்பு

சாவகச்சேரி ஓக. 11
கருங்குளவிக் கொட்டுக்கு இலக்காகி 4 பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு வெவ்வேறு இடங்களில் இந்தச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.
நுணாவில் மேற்கைச் சேர்ந்த 53 வயது நபர், கைதடி மத்தியைச் சேர்ந்த 52 வயது நபர், சாவகச்சேரி கற்குழியைச் சேர்ந்த 37 வயது நபர், பெருங்குளத்தைச்



சேர்ந்த 25 வயது நபர் ஆகியோரே குளவிக் கொட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ9)




வடக்கு மாகாணத்தில் இருந்து இம்முறை 61 தாதியர்கள் "விடுதி முகாமைத்துவமும் மேற்பார்வையும்" என்ற ஒரு வருட பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களுள் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட தாதியர்களை கௌரவிக்கும் நிகழ்வு மருத்துவமனை புற்றுநோய் விடுதி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ஐ)

# மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றக்கூடிய ஆபத்து

## எச்சரிக்கின்றது சுகாதாரப் பிரிவு

**கொழும்பு, ஓக.11**

**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. நேற்று முதல் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் மீண்டும் ஒரே நேரத்தில் ஒன்றுகூட வாய்ப்புக்கள் உள்ளமையால், இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளது என தொற்று நோய்ப் பிரி வின் விசேட வைத்தியர் சுதத் சமர வீர தெரிவித்துள்ளார்.

மேலும், பரிந்துரைக்கப்பட்டுள்ள சுகாதார முறைமைகளைத் தொடர்ந்தும் அதே முறையில் பின்பற்று மாறும் அவர் கோரியுள்ளார். நாட்டில் இதுவரை 2844 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 2,579 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அத்துடன் தற்போது 252 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதுடன் 11 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3)

---

நாடு முழுவதும் நேற்று

# பாடசாலைகள் மீள ஆரம்பம்

கொழும்பு, ஓக. 11

நாடளாவிய ரீதியிலான கல்வி நடவடிக்கைகளுக்காக நேற்று அனைத்து பாடசாலைகளும் இயங்க ஆரம்பித்துள்ளன. மாணவர்களும் பெரும் ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 தாக்கம் காரணமாக கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் இலங்கையில் கொவிட் 19 தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த மாதம் தொடக்கம் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்திருந்தன.

பொதுத்தேர்தல் காரணமாக மீண்டும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் மீண்டும் நேற்று கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொவிட் 19 பாதுகாப்பு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் மாணவர்கள் அதிகளவில் நேற்று பாடசாலைகளுக்கு வருகை தந்தனர் எனப் பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

200 மாணவர்களுக்கு குறைந்த பாடசாலைகளில் சாதாரணமாக 5 நாள்களும் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கபடவுள்ளமையுடன், 200 மாணவர்களுக்கு அதிகமான பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்புகளாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கபடவுள்ளன.

200 மாணவர்களுக்கு அதிகமான பாடசாலைகளில் முதலாம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் திங்கட்கிழமையும், 2 ஆம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமையும், 3 ஆம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் புதன்கிழமையும் இடம்பெறவுள்ளன. அத்துடன் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் 4 ஆம் மற்றும் 5 ஆம் தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. (ரி1-18)



---

# சுதந்திரக் கட்சியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு 14 பேர்

கொழும்பு, ஓக.11

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து 14 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி உள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொலனறுவை, குருநாகல், காலி, பதுளை, அனுராத புரம், அம்பாந்தோட்டை, கேகாலை, மொன ராகலை, கம்பஹா மற்றும் வன்னி மாவட்டங்களில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்தும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனித்தும் போட்டியிட்டது.

அதனடிப்படையில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவருமான மைத்திரிபால சிறிசேன மற்றும் தயாசிறி ஜயசேகர, ஷான் விஜேலால், சாந்த பண்டார, சாமர சம்பத் தசநாயக்க, துமிந்த திஸாநாயக்க, மஹிந்த அமரவீர, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜகத் புஷ்ப குமார, லசந்த் அழகியவன்ன, சாரதி துஷ்மந்த, நிமல் சிறிபால டிசில்வா, காதர் மஸ்தான் ஆகியோருடன் யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தெரிவாகி உள்ளனர். (ரி3)

---

# களியாட்ட நிகழ்வில் போதைப்பொருள் பாவனை

## 5 பெண்கள் உட்பட 20 பேர் கைது

பாணந்துறை, ஓக.11

பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வொன்றின்போது போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 5 பெண்கள் உட்பட 20 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பாணந்துறை மிலானியா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட இக் களியாட்ட நிகழ்வில் ஹெரோய்ன், கேரளக் கஞ்சா மற்றும் போதைப்பொருள் மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

---

# ஒன்பதாவது நாடாளுமன்றில் 11 பெண்களுக்கே பிரதிநிதித்துவம்

கொழும்பு, ஓக.11

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலைத் தொடர்ந்து, நாட்டின் 9ஆவது நாடாளுமன்றத்தை 11 பெண்களே பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் சார்பில் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, பவித்திரா வன்னியாராச்சி, கீதா குமாரசிங்க, ரஜிக்கா விக்கிரமசிங்க, முடித்தடி சொய்ஸா, கோகிலா குணவர்த்தன ஆகியோர் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற 17 தேசியப்பட்டியல் ஆசனங்களில் இரண்டு சீதா ஆரம்பி பொல, மஞ்சுளா திஸாநாயக்க ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தலதா அத்துக்கோரள, ரோஹினி விஜயரத்ன ஆகியோர் தேர்தலில் நேரடியாகத் தெரிவு செய் யப்பட்டுள்ளதோடு, அக் கட்சிக்கு கிடைக்கப் பெற்ற தேசியப் பட்டியல் ஊடாக டயானா கமகே அங்கத்துவத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலிருந்து இம்முறை எந்தவொரு பெண் பிரதிநிதியும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3)

---

# விசேட சுற்றிவளைப்பில் 331 பேர் கைது!

கொழும்பு, ஓக.11

மேல் மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத மதுபான உற்பத்தியீல் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ், 331 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹெரோய்ன் வைத்திருந்த 122 பேரும், சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட 94 பேரும், ஐஸ் ரகப் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 9 பேருமாக 331 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ரி2)

---

பிரிட்டனில் பெண் துஷ்பிரயோகம்:

# இலங்கைத் தமிழருக்கு 8 வருட சிறைவாசம்

லண்டன், ஓக.11

பிரிட்டனில் பெண் ஒருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட இலங்கைத் தமிழர் ஒருவருக்கு 8 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பிரித்தா னியாவில் வசிக்கும் 40 வயதுடைய இலங்கைத் தமிழருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

உணவகம் ஒன்றின் மேலாளராகப் பணியாற்றிய இலங்கையர் தனது பணியிடத்தில் வைத்து பெண் ஒருவரை பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இச் சம்பவம் இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்றுள்ளது. இந்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்ற நிலையில் நீதிமன்றம் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தது. பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை, கொடூரத் தாக்குதல் மேற்கொண்டமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 8 ஆண்டுகள் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் அவருக்கு பிணை வழங்குவதற்கு முன்னர் அவரது தண்டனையின் மூன்றில் இரண்டு பங்கையாவது அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ரி3)

# கொரோனாத் தடுப்பு மருந்தில் தேசியவாதம் காட்டுவது தவறு

## உலக சுகாதார அமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டு

**ஜெனிவா, ஓக.11**

**கொரோனாத் தடுப்பு மருந்து விவகாரத்தில் தேசியவாதத்தைக் காட்டுவது மிகவும் தவறானது என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் பெட்ரோஸ் அதனாம் தெரிவித்துள்ளார்.**



சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் அமைந்துள்ள அமைப்பின் தலைமையகத்தில் இருந்து காணொலி மூலம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: உலகம் முழுவதும் பரவி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. உலகின் பல்வேறு நாடுகள் அதற்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

கொரோனாத் தடுப்பு மருந்து விவகாரத்தில் தேசியவாதத்தை காட்டுவது மிகவும் தவறானதாகும். அத்தகைய சுயநலத்தால் யாருக்கும் நன்மை ஏற்படாது. நோய்களிலிருந்து விடுபட வேண்டுமென்றால் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து போராடவேண்டும். தற்போதெல்லாம் அனைத்து நாடுகளின் பொருளாதாரமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது.

இத்தகைய சூழலில் மற்றைய நாடுகளில் கொரோனா பரவிக் கொண்டிருந்தாலும் தங்கள் நாட்டுக்கு மட்டும் பாதுகாப்பு தேடுவது மிகவும் தவறு என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி1)



# பற்றைக்குள் வீசப்பட்ட சிசுவின் சடலம் மீட்பு

பண்டாரவளை, ஓக.11

பண்டாரவளை, பூனாகலைப் பகுதியைச் சேர்ந்த ஆர்னோல்ட் பெருந்தோட்டக் குடியிருப்பு ஒன்றின் பின்புறப் பற்றைக்குள் வீசப்பட்டிருந்த நிலையில் பெண் சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து, கொஸ்லந்தைப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸாரால் அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை யின் போதே குறித்த சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிசுவின் சடலத்தைப் பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிவான் கீர்த்தி கும்புறுஹேன, சட்ட வைத்திய பரிசோதனைக்காக பதுளை அரச மருத்துவமனைச் சட்ட வைத்திய அதிகாரி பிரிவிடம் ஒப்படைத்து அதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

28 வயது நிரம்பிய சிசுவின் தாயைக் கைதுசெய்யும் படி நீதிவானால் விடுக்கப்பட்ட உத்தரவையடுத்து, பொலிஸார் அப் பெண்ணைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

சிசு இறந்த நிலையில் பிரசவமானதா அல்லது கொலை செய்யப்பட்டதா என்று அறியும் வகையில் தீவிர புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகின்றது. (ரி2)

# ஒன்லைன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு

கொழும்பு, ஓக.11

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களை ஒன்லைனில் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியான பின்னர் இப் பதிவு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று தலைமை சார்ஜென்ட் ஆர்ம்ஸ் நரேந்திர பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய நாடாளுமன்றின் அமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் எனவும் தலைமை சார்ஜென்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒவ்வொரு நாடாளுமன்ற கூட்டத்தொடரும் தொடங்குவதற்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு செய்யப்படுகிறார்கள். இது முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களால் செய்யப்பட்டிருந்தாலும், நாட்டின் தற்போதைய சுகாதார நிலையைப் கருத்திற் கொண்டு ஒன்லைனில் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# அங்கொட லொக்கா உயிரிழப்பு: வெளியாகியது உடற்கூறு ஆய்வு

கொழும்பு, ஓக.11

பாதாள உலக உறுப்பினர் அங்கொட லொக்கா உயிரிழப்பு தொடர்பான உடற்கூறு ஆய்வு அறிக்கை வெளியாகியுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“இலங்கை போதைப்பொருள் கடத்தல் கும்பலின் நிழல் உலக தாதா அங்கொட லொக்கா, பிரதீப் சிங் என்ற பெயரில், கோவையில் கடந்த 2018ம் ஆண்டு முதல் வசித்து வந்தனர் எனக் கூறப்படுகிறது. கோவை காளப்பட்டியில் தனது காதலியுடன் வசித்து வந்த அங்கொட லொக்கா, கடந்த ஜூலை 4ம் திகதி, உயிரிழந்த நிலையில் மதுரையில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோவை காளப்பட்டி பகுதியில் அங்கொட லொக்காவுடன் வசித்து வந்தார் எனக் தான்ஜி என்ற இலங்கையைச் சேர்ந்த பெண், போலி ஆவணங்களைத் தயாரிக்க உதவிய மதுரையைச் சேர்ந்த பெண் வழக்கறிஞர் சிவகாமி சுந்தரி மற்றும் திருப்பூரைச் சேர்ந்த அவரது நண்பர் தியானேஸ்வரன் ஆகியோரை கோவை மாநகர பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரையும் 5 நாள் தடுப்பு காவலில் எடுத்து விசாரிக்க, சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில், கோவை அரசு மருத்துவமனையில் அங்கொட லொக்காவின் பிரேதப் பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் அவரது கை, கால் விரல் நகங்கள் நீல நிறத்தில் இருந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அங்கொட லொக்காவின் உடற்பாகங்கள் தடயவியல் சோதனைக்காக சென்னை அனுப்பப்பட்டுள்ள நிலையில் அவர், விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் சி.பி.சி.ஐ.டி., பொலிஸார் விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இருப்பினும், இரசாயன அறிக்கை வெளியான பின்னரே விஷம் வைத்துக் கொல்லப்பட்டாரா அல்லது இயற்கையான மரணமா என்பது தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பன்னிரண்டாவது நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் “இலங்கைத் தமிழர் இசை மரபு” என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts



# ஐ. தே.கவின் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் கைது

கொழும்பு, ஓக.11

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அநுர மஞ்சநாயக்க பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலிகமுவபொயகொட பகுதியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 14 ரவைகளுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது வீட்டைச் சோதனையிட்டபோது, நிலத்தை அகழும் அதிநவீன இயந்திரங்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி1)

# வேட்டையாடப்படும் வெளிநாட்டுப் பறவைகள்!

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

**சாவகச்சேரி, ஓக.11**
**சரசாலை குருவிகள் சரணாலயத்துக்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளை விசமிகள் சிலர் வேட்டையாடி வருகின்றனர் என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**



சரசாலை குருவிகள் சரணாலயப் பகுதிகளில் உள்ள நீர் நிலைகளை நாடி, காலை, மாலை வேளைகளில் பெருமளவான பருவகால வெளிநாட்டுப் பறவைகள் வருவது வழக்கம். அவ்வாறு வரும் பறவைகளை விசமிகள் சிலர் வேட்டையாடி வருகின்றனர். பறவைகள் மீது வலைகளை வீசி வேட்டையாடி வருவதனால், தற்போது அப்பகுதிக்கு பறவைகளின் வருகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது. ஆள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் ஒன்றுகூடும் விசமிகள், இவ்வாறு பறவைகளை வேட்டையாடி வருகின்றனர். சில தடவைகள் ஊரவர்கள் வேட்டையாட முற்பட்ட விசமிகளை மடக்கிப் பிடித்து எச்சரித்து விடுவித்த போதிலும் அவர்கள் வேட்டையை நிறுத்தாது சன நடமாட்டம் இல்லாத பகுதிகளில் வேட்டைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, இத்தகைய சட்டவிரோத வேட்டையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென, அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி1)



## வீதி செப்பனிடும் பணிகள் துரித கதியில் முன்னெடுப்பு

வவுனியா, ஓக.11
வவுனியா - மன்னார் பிரதான வீதி செப்பனிடும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
10 வருடங்களுக்கு மேலாக குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இவ் வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் இணைக்கப் பட்ட வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனர மைக்கப்படுகின்றன. புனரமைப்புப் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கொரோனா காரணமாக முற்றாக தடைப்பட்டிருந்தன.
இலங்கையில் கொரோனாத் தாக்கம் குறைவடைந்துள்ள நிலையில் தற்போது துரித கதியில் வீதி செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் வவுனியா- மன்னார் பிரதான வீதியில் காணப்படும் பாலங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் கற்பகபுரம் பம்மைமடு போன்ற பகுதி வரை காப்பெற் போடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (ரி1-18)

## மேலும் 14 பேருக்கு தனிமைப்படுத்தல் நிறைவு

கொழும்பு, ஓக.11
இராணுவத்தினரால் நடத்தப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் மையங்களில் இருந்து மேலும் 14 பேர் நேற்று வீடுகளுக்குத் திரும்பினர்.
இவர்கள் நேற்று மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னரே வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என கொவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.
அத்தோடு, தனிமைப்படுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்தமைக்கான சான்றிதழும் அவர்களுக்கு இதன்போது வழங்கப்பட்டது. 27 ஆயிரத்து 907 பேர் இதுவரையில் தமது தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என அந்த மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ரி2)

போதை தலைக்கேறிய நிலையில்

## புத்தரைத் தாக்கிய மூவர் கைதாகினர்

திருகோணமலை, ஓக.11
திருகோணமலை சேருநுவர பகுதியில் மதுபோதையில் புத்தர் சிலைகளை உடைத்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யபப்ட்டுள்ளனர் என சேருநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள மூவரும் மது போதையில் நேற்று முன்தினம் சேருநுவர சந்திக்கு அருகில் உள்ள புத்தர் சிலைகளை உடைத்து சேதமாக்கியுள்ளனர். மூவரும் திருகோணமலை சேருநுவர, தெஹி



வத்த வேவெல கெதர, அம்பாலே மெத நுவர பகுதிகளைச் சேர்ந்த 45 வயதுடைய வீரக்கோன் முதியன்சலாகே ரஞ்சித் அபேரத்ன, 30 வயதுடைய தனிபல முதியன் சலாகே அரேஸ் ஜெயசிங்க மற்றும் 26 வயதுடைய சமீர சம்பத்பண்டார சகலசூரிய எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



## 11 வயதுச் சிறுமி கின்னஸ் சாதனை

கொழும்பு, ஓக. 11
யாழ்ப்பாணம், அனலைதீவைச் சேர்ந்த சங்கவி ரதன் எனும் பதினொரு வயதுச் சிறுமி, இடுப்பில் வளையம் ஒன்றைச் சுற்றியவாறு, றூபிக்கின் கனசதுரத்தின் தனித்தனி நிறங்களை ஒரு கையினால் ஒழுங்குபடுத்தி கின்னஸ் உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.
இந்தச் சிறுமி ஓகஸ்ட் 1 ஆம் திகதி கனடா மிஸிஸாகா நகரில் கின்னஸ் சாதனை நிறுவனப் பிரதிநிதிகள் முன்னிலையில், 55 நிமிடங்களில் 30 தடவைகள் 3x3 றூபிக்கின் கனசதுரத்தை ஒழுங்குபடுத்தி, 25 தடவைகள் என்றிருந்த முன்னைய கின்னஸ் சாதனையை முறியடித்து, புதிய உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.
கொரோனா காலத்தில் வீட்டில் இருந்த காலத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தி இந்த உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். புத்தகம் ஒன்றை வாசித்தும், பல காணொலிகளைப் பார்த்தும் இதில் உள்ள நுட்பங்களைக் கற்றுத் தெரிந்து மூன்று மாதங்களாகப் பயிற்சியில் ஈடுபட்டு இவர் இதனைச் சாத்தியமாக்கியுள்ளார். சங்கவி இந்தச் சாதனையை நிறைவேற்ற இடுப்பில் வளையம் சுற்றுவதை தனது இளவயதில் கற்றிருந்தமை உதவியாக இருந்தது. பிறப்பின்போது ஏற்பட்ட காயம் ஒன்றினால் வலக்கரம் இயங்க முடியாத நிலையிலும், தனது இடக்கரத்தினால் இவர் இந்தச் சாதனையை மேற்கொண்டு பலருக்கு ஒரு முன்னு தாரணமாகத் திகழ்கின்றார். (ரி2)

அரசவை தகர்க்கப்பட்ட சம்பவம்;

## குருநாகல் மேயர் உள்ளிட்ட குழுவை கைது செய்வதற்கு 4 விசேட குழுக்கள்

குருநாகல், ஓக.11
குருநாகல் புவனேகபாகு மன்னரின் அரசவை தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குருநாகல் நகரசபை தலைவர் உள்ளிட்ட குழுவை கைது செய்வதற்காக 4 விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குருநாகல் மாநகர மேயர், நகர ஆணையாளர் மற்றும் மேலும் மூவரை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பதில் பொலிஸ்மா அதிபருக்கு அண்மையில் பணிப்புரை விடுத்திருந்தார். அந்த ஐவரையும் நீதிமன்றத்தினூடாக பிடியாணைப் பெற்று கைது செய்யுமாறு சட்டமா அதிபர் வலியுறுத்தியிருந்தார்.
குருநாகல் இரண்டாவது புவனேகபாகு மன்னரின் அரசவைக் கட்டடத்தைச் சேதப்படுத்தியமை தொடர்பாக இவர்களைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் கூறியுள்ளார்.
மேலும் தொல்பொருள் கட்டளைச் சட்டம் மற்றும் பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறும் சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். இந்த நிலையில், சந்தேகநபர்கள் இருக்கும் இடத்துக்குப் பொலிஸார் செல்லும் போதெல்லாம் அவர்கள் அங்கு இருப்பதில்லை என குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இவ்வாறான நிலையிலேயே குருநாகல் நகரசபை தலைவர் உள்ளிட்ட குழுவை கைது செய்வதற்காக 4 விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)

# இன்றைய நாள்

**மேஷம்:** துடிப்புடன் செயல்படும் நாள். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். முன்பு அரை குறையாக நின்ற வேலைகள் முடியும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள்.

**இடபம்:** மன நிறைவான நாள். கலைஞர்கள் மனச்சாட்சியுடன் நடப்பார்கள். வியாபாரம் தொடர்பான முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம். பணவரவு எதிர்பார்த்ததை விட குறையக் கூடும்.

**மிதுனம்:** மனக்குறை தொடரும் நாள். கடன் விஷயங்களை தள்ளிபோடலாம். குடும்பத்தினருடன் பேசும்போது நிதானம் தேவை. விலை உயர்ந்த பொருள்களை கவனத்துடன் கையாள வேண்டும்.

**கடகம்:** மனதில் மகிழ்ச்சி கூடும் நாள். மேலதிகாரிகளுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். வியாபாரிகள் வருமானத்தைப் பெருக்க முயற்சி செய்வார்கள். புதிய எண்ணங்களை செயல்படுத்த வேண்டாம்.

**சிம்மம்:** சற்றே சோர்வான நாள். ஒரே நேரத்தில் பல பொறுப்புகளை கவனிக்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாவீர்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**கன்னி:** எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும் நாள். வாழ்க்கைத் துணையின் குறையை பிறரிடம் பகிர வேண்டாம். குடும்பத்தினருடன் வாக்கு வாதங்கள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உழைப்பால் உயரும் நாள். பணியாளர்களுக்கு மேலதிகாரியின் ஆலோசனை கை கொடுக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும்.

**விருச்சிகம்:** பெண்கள் எதிர்பார்த்த செய்தியை பெறும் நாள். கலைத்துறையினருக்கு சொத்துக்களை அடைவதில் தடைகள் ஏற்படும். தேவையான வசதிகள் கிடைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சுபநிகழ்ச்சி ஏற்பாட்டில் தடங்கல் நீங்கும் நாள். பணியாளர்களுக்கு சிறு மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும்..

**மகரம்:** இயல்பான நாள். எதிலும் முன்னேற்றம் இல்லை என்ற எண்ணம் இருக்கும். பணக்கவலை சிறிதும் இருக்காது. குடும்ப சூழல் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும்.

**கும்பம்:** மகிழ்ச்சியான நாள். பணியிடத்தில் இடையூறுகளை சாதுர்யமாக சமாளிப்பீர்கள். சுபநிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடாகும்.

**மீனம்:** குதுாகலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். பணியைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் லாபத்தைக் காண்பீர்கள்.

# பிலிப்பைன்ஸின் விசேட விமானங்கள் மத்தள விமான நிலையத்துக்கு!




**கொழும்பு, ஓக.11**
**எயார் ஏசியா பிலிப்பின்ஸ், மாலுமிகளை இடம்மாற்றும் செயற்பாட்டுக்காக இலங்கையின் மத்தள விமான நிலையத்திற்கு சிறப்பு விமானங்களை இயக்கத் தொடங்கியுள்ளது.**

இதன் அடிப்படையில், முதலாவது எயார் ஏசியா பிலிப்பைன்ஸ் இ.சட் 28161 விமானம் 13 வெளிநாட்டு மாலுமிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் 1.50 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது. இந்த விமானம் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் 14 பிலிப்பைன்ஸ் மாலுமிகளுடன் பிலிப்பைன்ஸ் நோக்கிப் புறப்படவுள்ளது. கொவிட் 19 தொற்றுநோய் நாட்டிற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இலங்கை சர்வதேச கப்பல் சமூகத்தின் மத்தியில் கப்பல்களின் பாதுகாப்பான செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கப்பல் குழுவினரை மாற்றுவதற்கு வசதியான இடமாக அமைந்துள்ளமை இந்த நடவடிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஜுன் இறுதி வாரத்திலிருந்து 50 க்கும் மேற்பட்ட திருப்பி அனுப்புதல் மற்றும் மாலுமிகள் குழு பரிமாற்ற விமானங்கள் மத்தளவிலிருந்து இயக்கப்படுகின்றன. இதேவேளை குழு மாற்றங்கள் இலங்கை சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## புதிய உறுப்பினர்களில் மூவர் முனைவர் பட்டம் பெற்றவர்கள்

கொழும்பு, ஓக. 11
நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டவர்களில், அதிக வாக்குகளைப் பெற்று புதிதாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மூவரும் முனைவர் பட்டம் பெற்ற பட்டதாரிகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில், அதிக வாக்குகளைப் பெற்றவர்களில் முதலாவதாக கம்பஹா மாவட்டத்தில், பேராசிரியர் நாலக கொடஹேவா தெரிவாகியுள்ளார். அவர் 325,479 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இரண்டாவதாக, குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட பேராசிரியர் குணபால ரத்னசேகர தெரிவாகியுள்ளார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவர். அவர் 141,991 வாக்குகளைப் பெற்றுள்ளார். மூன்றாவதாக, ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான வைத்தியர் ஜயசுமன என்பவராவர். அவர் 133,980 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். (ரி2)

## சடலம் மீட்பு

கொழும்பு, ஓக.11
கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியிலிருந்து நபரொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபரின் சடலமே இவ்வாறு கார் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அவர் கொட்டாஞ்சேனை பிரதேசத்திலுள்ள தனியார் நிறுவன மொன்றில் திட்டமிடல் முகாமையாளராகக் கடமையாற்றி வந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்ற பின் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இது தற்கொலையாக இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ரி1)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை புதன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** மண்கும்பான், மண்கும்பான் விடுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, அல்லைப்பிட்டி, வெண்புரவிநகர், பூம்புகார், மண்டைதீவு, மண்டைதீவு கடற்படை முகாம், மண்கும்பான் கடற்படை முகாம், சேந்தாங்குளம், இளவாலை, மெய்கண்டான் பாடசாலை ஆகிய டங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** பத்தினியார் மகிழங்குளம் கிராமம், மகாகச்சக்கொடிய கிராமம், தாண்டிக்குளத்திலிருந்து கீரிசுட்டான் வரை, மறக்காலும் பளையிலிருந்து மணிபுரம் வரை, இரணையிலுப்பைக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, நொதேர்ண் பண்ணை, புதுக்குளம் நீர்ப்பாசன சபை, பளை சமயபுரம் வரண் அரிசி ஆலை, கற்கடந்தகுளம் ஆகிய இடங்களிலும், **மன்னார் மாவட்டத்தில்** நீலாமடுவிலிருந்து சிலாவத்துறையூடாக அரிப்பு மற்றும் முள்ளிக்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.




## 176 இலங்கையர் நாட்டை வந்தடைந்தனர்

கொழும்பு, ஓக.11
வெளிநாடுகளில் தங்கியிருந்த மேலும் 176 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

கட்டாரிலிருந்த 28 இலங்கையர்களும், ஜப்பானிலிருந்த 148 இலங்கையர்களுமே இவ்வாறு நாட்டை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி2)

# 'யாழ் விருது' பெறும் கவிஞர் சோ.ப



■ தி.செல்வமனோகரன்
(செயலாளர், சைவ வித்யா விருத்திச் சங்கம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு சமய சமூக பணியாற்றிவரும் மண்ணின் மைந்தர்களுக்கு வருடந்தோறும் 'யாழ் விருது' வழங்கி கௌரவித்து வருகின்றது. அந்தவகையில் இவ்வருடம் 2020 சோ.பத்மநாதனுக்கு இவ்விருதை வழங்குகிறது.

யாழ்ப்பாண வண்ணார்பண்ணையின் வடமேற்கில் இருக்கும் சிப்பித்தறை எனும் இடத்தில் 1939.09.14 அன்று பிறந்தவரே கவிஞர் சோ.பத்மநாதன்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். வித்துவான் கார்த்திகேயனிடம் தமிழும் கம்யூனிஸ்ட் கார்த்திகேசனிடம் ஆங்கிலமும் கற்கும் பேறு பெற்றவர். சிறுவயது முதலே தமிழ், ஆங்கிலம், சமயம் என்பவற்றில் ஈடுபாடுடையவராக இவர் திகழ்ந்துள்ளார். தாய்மாமனின் சுருட்டுக் கொட்டில் இவருக்கு அறிவூட்டும் இன்னொரு கலாசாலையாகத் திகழ்ந்தது.

குடும்பச் சூழலால் மேற்படிப்பைத் தொடரமுடியாது போன சோ.ப , 18 வயதில் அரச உத்தியோகத்தைத் தேடிக்கொண்டார். எழுதுவினைஞராக ஆறு ஆண்டுகள் பணிபுரிந்தபோதும் ஆசிரியராவதே அவரின் விருப்பமாக இருந்தது. அதன் விளைவாக ஆங்கில ஆசிரியராகி பலாலி ஆசிரியர் கலாசாலையில் சிறப்புப் பயிற்சி பெற்றார். காலக்கிரமத்தில் ஆங்கில சிறப்புப் பட்டதாரியாகி பிரிட்டிஷ் கவுன்ஸில் புலமைப் பரிசு பெற்று இங்கிலாந்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டார். நாடு திரும்பிய சோ.ப. பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக, உப அதிபராக, அதிபராக பதவிகள் வகித்து ஓய்வு பெற்றார். பலாலியில் வாய்த்த கலாநிதி கு.சிவப்பிரகாசம் பண்டிதர் க.சச்சிதானந்தன் ஆகியோரின் உறவை அவர் இன்றும் நினைந்து உருகுகிறார்.

மாணவராக இருக்கும் காலத்திலேயே கவிதை புனைவதில் வல்லவரானார். தினகரன் உள்ளிட்ட பத்திரிகைகளிலும் சிறு சஞ்சிகைகளிலும் புலம்பெயர் தேசத்து வெளியீடுகளிலும் இன்று வரை எழுதி வருகிறார். காவடிச்சிந்து எழுதிய ஈழத்தமிழர் இவரே. அவருடைய இன்னொருதுறை மொழிபெயர்ப்பாகும். யாழ்ப்பாணத்தில் இன்றும் ஜீவந்தராக இருக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆங்கிலப் புலமையாளர்களில் முதன்மையானவர் இவர். ஆங்கிலத்தில் வெளிவந்த பல்வேறு நாடுகளின் பல்வேறு மொழிபேசும் மக்களின் படைப்புக்களை தமிழுக்கும் தமிழ்ப் படைப்புக்களை ஆங்கிலத்துக்கும் பெயர்ப்புச் செய்தமை இவரது முக்கிய பணியாகும். இது வரை கவிதைத் தொகுப்புக்களாகவும் மொழிபெயர்ப்பாகவும் மொத்தம் 14 நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் ஆறு நூல்கள் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பரிசில்களையும் நான்கு நூல்கள் இலங்கை சாகித்திய மண்டல பரிசில்களையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சோமசுந்தரபிள்ளை பத்மநாதன் எனும் இரு சீரும் இணைந்து அறிந்தவர்கள் யாவரும் ஒரு சீராக உச்சரிப்பது சோ.ப என்றே. சிறந்த ஆசிரியர், சிறந்த அதிபர், ஆங்கில விரிவுரையாளர் தமிழ் அறிஞர் கவிஞர் ,பேச்சாளர் மொழிபெயர்ப்பாளர் விமர்சகர் கலாரசிகர் எனப் பல தளங்களில் சோ.ப அறியப்பட்டாலும் பேசாப் பொருளாக இலங்கும் அவரின் பெரும் பணி சமூகப் பணியே. சமூகத்தில் பாடசாலைக்காலம் தொட்டே பல்வேறு பணிகளை ஆற்றி வருபவர் இவர். ஆசிரியகலாசாலையிலும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளார். ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கம், இளங்கலைஞர் மன்றம் ,நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் உள்ளிட்ட பல நிறுவனங்களில் இணைந்து பல்வேறு பதவிகளை அலங்கரித்து பிரதிபலன் எதிர்பாராது சிறப்புப் பணியாற்றியுள்ளார். ஆயினும் இன்று வரை சோ.ப வினுடைய சமூகப் பணியின் தளமாக இலங்குவது சைவவித்தியா விருத்திச் சங்கமாகும். சேர்.பொன்.இராமநாதன் சேர்.வைத்திலிங்கம் துரைசாமி மு.சி.இராசரத்தினம் அ.கனகரத்தினம் உள்ளிட்டோரின் ஆதரவில் தோன்றிப் பின் சு.இராசரத்தினத்தினால் வழிநடத்தப்பட்ட நிறுவனமே சைவ வித்தியா விருத்திச் சங்கம். தமிழ்ச் சைவக் குழந்தைகள் தம் சமய சமூகச் சூழலில் தமக்கேயுரிய பண்பாட்டு அடையாளங்களோடு கல்வி கற்கும் வாய்ப்பை இந்நிறுவனம் வழங்க முற்பட்டது. இதன் செயல்நெறியில் ஏறத்தாழ 187 பாடசாலைகள் ஒரு சைவாசிரியார் கலாசாலை மற்றும் இரு அநாதைச் சாலைகள் பல தொழில் பயிற்சி மையங்கள் என்பன நடத்தப்பட்டன. 1961 இல் இலங்கையரசு பாடசாலைகளைப் பொறுப்பெடுத்தது. சைவ ஆசிரியர் கலாசாலைகளை மூடிவிட்டது. தற்காலத்தில் சங்கத்தால் நடத்தப்பட்டுவருவது இரு சைவச் சிறுவர் இல்லங்கள் மட்டுமே.

தொண்ணூறுகளில் ஏற்பட்ட யுத்தச் சூழல் மற்றும் சமூக மாற்றங்களுக்கு இடையில் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி இருந்த சங்கத்தை புதிய நிர்வாகம் 1993 இல் பொறுப்பேற்றது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையிலான புதிய நிர்வாகத்தின் செயலாளராக சோ.ப தெரிவு செய்யப்பட்டார். ஒவ்வொரு நாளும் செலவுக்குப் பணம் புரட்டுவதே பெரும்பாடாக இருந்தது. பணம் இல்லாநாள்களில் நிர்வாகத்தினர் தத்தம் பணத்தை இட்டே இல்லக் குழந்தைகளுக்கு உணவளித்தனர்.

**1995 யாழ்ப்பாண இடப்பெயர்வு**

இல்லக் குழந்தைகள் நல்லை ஆதீனத்திலும் பின் மீசாலையில் பேராசிரியர் அருணாசலம் இல்லம், வதிரி பரமானந்தா ஆச்சிரமம் பின்பு வன்னி என இடம் பெயர்ந்தனர். யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய காலத்தில் (1996) மீள்குடியேற்றம் நிகழ்ந்தது. அவரவர் தம் சொத்தை தேடி அடையவும் காணிகளின் எல்லைகளைக் கண்டு கதிகால் போடவும் வேலி அடைக்கவும் தம் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். சோ.ப தனது பொழுதுகளை எழுத்திலும் சமூகப் பணியிலும் கழித்தார். அதில் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணி மிக முக்கியமானது. கலாநிதி ஆறு.திருமுருகன் அ.செந்திலிங்கம் ஆகியோருடன் இணைந்து அரும்பாடுபட்டு இல்லப் பொருட்களை பாதுகாக்க முற்பட்டனர். கோண்டாவிலில் பழனி கோவிலடியில் இல்லக்கட்டில்கள் இராணுவ காவலரண்களில் இருக்கின்றமையை அறிந்து அவர்களுடன் உரையாடி அதனை மீட்டெடுத்தனர். பல்வேறு நெருக்கீடுகள் இடர்களுக்கு மத்தியில் சங்கச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் சோ.ப வின் பங்கு முக்கியமானதாகின்றது. 1998 இல் மீள உருவாக்கம் பெற்ற சங்கப் பணிப்பாளர் சபையில் செயலாளராகவும் 2001 இன் புதிய நிர்வாக சபையிலும் செயலாளராகவும் 2004இல் உபதலைவராகவும் 2007இல் நிதிச் செயலராகவும் 2010இல் இருந்து இன்று வரை தலைவராகவும் அரும்பணியாற்றி வருகின்றார். பல்வேறு காலங்களில் பல்வேறு அரும்பணிகள் நிகழ்ந்து வந்தபோதும் இவருடைய தலைமையிலான பணிப்பாளர் சபையின் காலம் அதிர்ஷ்டம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. இவருடைய ஊக்கத்தினால் க.சி.குலரத்தினம் எழுதிய 'இந்துபோர்ட்' இராசரத்தினம் காலமும் வாழ்வும் மற்றும் சைவ வித்தியா விருத்திச் சங்க பணிகளை உள்ளடக்கியதும் சு.இராசரத்தினத்தின் 125ஆவது பிறந்தநாள் நினைவாகவும் உருவாக்கப்பட்ட சைவ வித்தியா மற்றும் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய வானவில் மற்றும் இல்லக விளக்கு எனும் சஞ்சிகைகள் என்பன வெளியிடப்பட்டன. இவர் தலைமையிலுள்ள பணிப்பாளர் சபையே 2011ஆம் ஆண்டில் பெண்கள் இல்லத்தின் வட மற்றும் தெற்குப் புறக் காணிகளைக் கொள்வனவு செய்தது. வடதிசைக் காணியில் பூங்காவும் தென்திசைக் காணியில் பெண்களுக்கான வலைப்பந்துத் திடலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்கள் பெண்கள் இல்லங்களில் புதிய கட்டிடங்கள் எழுந்துள்ளன.

பல்வேறு காணிகள் சங்கத்துக்கு உள்ளன எனக் கூறப்பட்டு வருகின்ற போதிலும் காணியுறுதிகளோ அவை சார்ந்த ஆவணங்களோ சங்கத்திடம் இல்லை. ஆயினும் இவரின் தலைமைத் திறத்தினால் சங்கப் பண்ணைக்கு அருகாமையில் இருந்த 13 பரப்புக் காணி சங்கத்துக்குரியது என இனங்காணப்பட்டு உரிய சட்ட நடவடிக்கையின் ஊடாக உறுதி முடிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிர்வாகத்தின் திறனில் நம்பிக்கை கொண்ட லண்டன் கனக துர்க்கா ஆலய ஸ்தாபகரும் உரும்பிராய் கருணை இல்ல ஸ்தாபகரும் பல்வேறு அறப்பணிகள் புரிந்தவருமான அமரர் பொன்.தெய்வேந்திரம் தமது இலட்சிய இல்லமான உரும்பிராய் கருணை இல்லத்தை சைவ வித்தியா விருத்திச் சங்கப் பெயரில் 26.12.2013 அன்று சட்ட ரீதியாக ஒப்படைத்தார். மறுநாள் அவரின் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தது. சோ.பத்மநாதனின் தலைமை மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை இங்கு முக்கியமானது. அது இன்று வரை காப்பாற்றப்படுகின்றது. இவை யாவற்றுக்கும் முடிசூடினாற் போல் இவர் தலைமையிலான பணிப்பாளர் சபையின் அயரா முயற்சியால் இல்ல மாணவர்கள் உயர் கல்வியின் நிமித்தம் பல்கலைக்கழகங்களுக்கும் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் தெரிவாகி வருகின்றனர்.

தனது பொன்னான நேரத்தின் பெரும் பகுதியை சங்கத்தின் வளர்ச்சிக்கும் இல்லச் சிறார்களின் நல்வாழ்வுக்குமாக ஏறத்தாழ 27 வருடங்களாக அர்ப்பணித்து பணிபுரிந்து வருகின்ற சோ.பத்மநாபனின் சமூக அக்கறை முக்கியமானது. 81 வயதிலும் இளைஞனாக பற்பல சமூகப் பணிகளைப் புரிந்து கொண்டும் ஆக்க இலக்கியங்களைப் படைத்துக் கொண்டும் அர்த்தபுஷ்டியான வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கின்ற சோ.ப வுக்கு கௌரவம் மிகுந்த யாழ் விருதை வழங்கி யாழ்ப்பாண மாநகரசபை தனக்குப் பெருமை தேடிக் கொள்கிறது. சோ.ப . ஆரோக்கியத்தோடு நீடூழி வாழ்ந்து இன்னும் பல நற்பணிகளைத் தொடர வேண்டும் என இறையருளை வேண்டுகிறோம்.

# நாடாளுமன்றுக்கு ஞானசார தேரர்!

## உறுதிப்படுத்தியது அபே ஜனபல பக்ஷ

**கொழும்பு, ஓக. 11**

**அபே ஜனபல பக்ஷக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேசியப் பட்டியல் ஆசனம் பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கே வழங்கப்படும் என திட்டவட்டமாக அறிவித்த அந்தக் கட்சியின் பொதுச் செயலர் சமன் பெரேரா, நாடாளுமன்றத்தில் ஞானசார தேரர் பௌத்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கையும் விடுத்துள்ளார்.**

பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த மத உரிமை, நாட்டின் இறையாண்மை ஆகியவை தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலர் ஞானாசார தேரர் குரல் கொடுத்தார். நாடாளுமன்றத்திற்கு இவர் செல்ல வேண்டும் என்பது பெரும்பாலான பௌத்த மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்தது. இதன் பின்னணியிலே அவர் பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். எங்கள் மக்கள் சக்தி கட்சி தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நான்கு மாகாணங்களில் நிராகரிக்கப்பட்டன. 17 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டு சுமார் 67ஆயிரம் வாக்குகளைக் கைப்பற்றியுள்ளோம். இதற்கமைய எமது கட்சிக்கு தேசியப் பட்டியல் ஊடாக ஓர் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆசனத்தை ஞானசார தேரருக்கு வழங்க வேண்டும் என கட்சியின் செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்தது.

கட்சியின் செயற்குழு ஏகமனதாக எடுத்த தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளோம். அத்துரலியே ரத்னதேரர் எங்கள் மக்கள் சக்தி கட்சியில் போட்டியிட்ட ஒரு வேட்பாளர் மாத்திரமே. தேசியப் பட்டியல் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் அவருக்குக் கிடையாது - என்றார். (ம)

---

*ஐக்கிய மக்கள் சக்தியின்*

# தேசியப் பட்டியல் யாழுக்கு வேண்டும்

யாழ்ப்பாணம், ஓக. 11

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் ஒன்று வழங்கப்பட வேண்டும். குறிப்பாக யாழ் மாவட்டத்திற்கு வழங்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். அதே வேளையில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என யாழ். மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பாக வடக்கு கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் தமிழ் மக்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள். இலங்கை மக்கள் சரிசமமாக ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்கின்றனர். அவர்கள் சட்டங்களையும் கொள்கைகளையும் இயற்றக் கூடிய புதிய நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சார்பில் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று யாழ் மாவட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு யாழ். மாவட்டத்திலுள்ள தமிழர் ஒருவருக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் ஐக்கிய மக்கள் சக்தியில் யாழ் மாவட்டத்தில் களமிறக்கப்பட்ட வேட்பாளர்கள் தங்களுடைய விருப்பு வாக்குகளைச் சேகரித்துக் கொள்வதில் கவனம் செலுத்தினார்களே தவிர கட்சிக்கு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தவில்லை. அதனாலேயே யாழ் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஒரு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போயிற்று.

தேர்தல் வாக்குறுதிகளை சீர்தூக்கிப் பார்த்து தூரநோக்குடன் ஒரு முறைக்கு பலமுறை சற்று நிதானமாகச் சிந்தித்து பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்திருக்க வேண்டும். திரும்பவும் பழைய பல்லவிகளையும் பழைய மரபுகளையும் நடைமுறைப் படுத்துகின்ற அரசியல் காய் நகர்த்தல்களையே தொடர்ந்து இனி வரும் காலங்களில் கேட்கப் போகின்றோம். மக்கள் அத்தகையவர்களையே தெரிவுசெய்துள்ளனர் - என்றார். (ம)

---

# கால்வாயில் மிதந்து வந்த முதியவரின் தலை!

அம்பாறை, ஓக.11

முதலையால் இழுத்துச் செல்லப்பட்டவரின் தலை கால்வாயில் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அம்பாறை சவளக்கடைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிக்கல்முனை பகுதியிலுள்ள வழுக்கமடு பாலத்தின் அருகே நடந்துள்ளது.

மாடு மேய்க்கச் சென்றவரை முதலை இழுத்துச் சென்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

வழமைபோன்று மாடுகளை பார்ப்பதற்காகவயல்வெளிகளுடன் இணைந்த வழுக்கைமடு நீர்க்கால்வாய் அருகில் சென்றுள்ளார்.

பின்னர் தனது உடுதுணிகளை நீர்க் கால்வாய் அருகில் வைத்துவிட்டு கால்வாயில் இறங்கிக் குளித்துள்ளார். அவரை கால்வாயில் இருந்த முதலைகள் இழுத்துச்சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கிராமத்தவர்களின் உதவியுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது காணாமற்போனவரின் ஆடைகள் கால்வாய் கரையோரத்தில் இருந்து மீட்கப்பட்டன.

பின்னர் சுமார் 800 மீற்றர் தொலைவில் கால்வாயில் மிதந்து வந்த நிலையில் தலை மீட்கப்பட்டது. சவளக்கடை பொலிஸாரி விசாரணைகளை அடுத்து அப்பகுதியைச் சேர்ந்த 65 வயது மதிக்கத்தக்க றோக்கு ஜோசப் என்பவரது தலை என அடையாளம் காணப்பட்டது. (க)

---

# உலக சாதனை படைத்த ஒரே பிரதமர் மஹிந்தவே!

*கம்மன்பில புகழாரம்*

கொழும்பு,ஓக.11

தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளில் மூன்று முறை நியமிக்கப்பட்ட ஒரே பிரதமர் என்ற உலக சாதனையை மஹிந்த ராஜபக்ஷ படைத்துள்ளார் என்று பிவித்துரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



அதற்கமைவாக மஹிந்த ராஜபக் ஷ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று உதய கம்மன்பில தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (க)

---

# வாக்களித்த மக்களுக்கு துரோகம் இழைப்பு

*வேலுகுமார் சுட்டிக்காட்டு*

கொழும்பு,ஓக.11

வெற்றி வாய்ப்பு இல்லை எனத் தெரிந்தும் கண்டி மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிப்பதற்கு துணை நின்றமை துரோகமாகும். தேசியப்பட்டியல் வழங்கப்படும் என்ற நம்பிக்கையை வழங்கிவிட்டு, வாக்களித்த மக்களை ஏமாற்றியமை வரலாற்றுத் துரோகமாகும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளருமான எம்.வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கண்டி மாவட்டத்தில் வெற்றிபெறமுடியாது எனத் தெரிந்தும், தமிழ் வாக்குகளைச் சிதறடித்து, இருக்கின்ற தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும் இல்லாதொழிக்கும் நோக்கில் வேட்பாளர் ஒருவரை போட்டியிடவைத்து பேரினவாதிகளின் சூழ்ச்சிகளுக்கு இ.தொ.கா. துணை நின்றது.

ஆனாலும், இதில் எவ்வித தவறும் இல்லை என்பது போல் பரப்புரைகளில் நியாயம் கற்பிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் காங்கிரஸ் வேட்பாளர் கணிசமானளவு வாக்குகளைப் பெற்றால் நிச்சயம் தேசியப்பட்டியலொன்று கிடைக்கும். அதன் ஊடாக கண்டி மாவட்டத்துக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது.



ஆனால், உறுதியளித்த படி தேசியப்பட்டியல் வாய்ப்பு வழங்கப்படவில்லை. பொதுஜன பெரமுன வால் முன்வைக்கப்பட்டுள்ள பெயர் பட்டியலில் இ.தொ.கா. உறுப்பினர்களின் பெயர் இல்லை. அதனைப் பேரம் பேசி பெறுவதற்கான ஆற்றலும் அக்கட்சிக்கு இல்லை.

தேர்தல் காலத்தில் மட்டும் கண்டியில் முகாமிட்டு இருந்தவர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளனர். நம்பிக்கையின் அடிப்படையில் வாக்களித்த மக்கள் நடு வீதியில் விடப்பட்டுள்ளனர்.

ஆனால், கண்டி மாவட்ட தமிழ்ப் பேசும் மக்களை நான் ஒருபோதும் கைவிடமாட்டேன். இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் தமிழ் பேசும் மக்களுக்கான குரலாய் ஒலிப்பேன் - என்றுள்ளது. (க)

# 19ஆவது திருத்தத்தை நீக்கினால் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கும்!

## சஜித் பளார் கருத்து

கொழும்பு, ஓக. 11
19ஆவது திருத்தத்தின் மட்டில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் ஐக்கிய மக்கள் சக்தி அதைக் கடுமையாக எதிர்க்கும் என்று தெரிவித்தார் அந்தக் கட்சியின் தலைவரான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மையை ஏற்படுத்தும் வகையில் அரசால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்றிட்டத்திற்கும் நாங்கள் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்போம். ஆனால் 19ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் எந்த ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்க மாட்டோம்.
19ஆவது அரசமைப்புத் திருத்தத்தைப் பொறுத்தமட்டில் சுயாதீன ஆணைக் குழுக்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. அதனால் அந்தத் திருத்தத்தை நீக்குவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். ஆனால் நாட்டுக்கு நன்மைபயக்கும் வகையில் புதிய திருத்தங்கள் எதுவும் கொண்டுவரப்பட்டால் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (ம)

### மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள

# புதிய அரசின் முதலாவது பணி 19 திருத்தத்தில் கை வைப்பதே!

## மஹிந்தவின் சகா நாலக தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 11
பொதுமக்கள் முன்னணிக்குக் கிடைத்துள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வைத்து நாட்டின் 19ஆவது திருத்தத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதே அரசின் முதலாவது செயற்பாடாக அமையும் என்று தெரிவித்தார் மஹிந்தவின் சகாவான நாலக கொடஹேவா.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆட்சியாளர்களுக்கு அளவுக்கு மீறி அதிகாரம் கிடைக்கும்போது அரச நிர்வாகம் ஒரு கட்டத்தில் சர்வாதிகாரப் போக்கினைக் கொண்டதாக மாறிவிடும். இலங்கையிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கை கொண்டு பெரும்பாலான மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளார்கள். கிடைக்கப் பெற்றுள்ள ஆணையதிகாரத்தை ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தமாட்டோம். மக்களின் முன்னேற்றம், நாட்டின் இறையாண்மை பாதுகாப்பு ஆகியவற்றுக்காக பெரும்பான்மை பலம் முழுமையாக பயன்படுத்தப்படும். பலதரப்பட்ட தரப்பில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள அரசமைப்பின் 19ஆவது திருத்தம் தொடர்பில் 9ஆவது நாடாளுமன்றத்தில் உரிய கவனம் செலுத்தப்படும்.
சேறுபூசும் அரசியல் கலாசாரத்தை அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மக்களை ஏமாற்ற முடியாது. அரசியல்வாதிகளைக் காட்டிலும் புத்திசாலிகளாக இன்று மக்கள் உள்ளார்கள். நாட்டுக்கும், மக்களுக்கும் ஆற்றும் சேவைகளை முன்வையுங்கள். மக்கள் முழுமையான ஆதரவை வழங்குவார்கள் - என்றார். (ம)

# ராஜபக்ஷக்களிடையே உள்ள பாசம்தான் அவர்களின் வெற்றி

## மனோ கணேசன் ஆதங்கம்



கொழும்பு, ஓக. 11
ராஜபக்ஷ சகோதரர்களிடையே காணப்படும் பாசம்தான் அவர்களது வெற்றிக்கு அடிப்படைக் காரணம் என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றை இட்டுள்ள அவர், இது தொடர்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
'எனக்கு இப்படி ஒரு தம்பி இல்லையே என ஏக்கமாக இருக்கிறது..! பிறப்பால் 'அண்ணா' என கூட வந்தவர்களும் சரி, இடையில் 'அண்ணா' என கூட வந்தவர்களும் சரி, என்னைப் பயன்படுத்தி அரங்குக்கு வந்துவிட்டு என் முதுகில் அல்லவா குத்துகிறார்கள்? 'ராஜபக்ஷ சகோதரர் மத்தியில் முரண்பாடு. சும்மா படம் காட்டுகிறார்கள்' என்று எவரும் சொல்லலாம். ஆனால் இவ்வளவு நாள் படம் ஓட்ட முடியாது. இந்த பாசம்தான் இவர்களது வெற்றிக்கு அடிப்படை' என்றுள்ளார். (ம)

# உலக சந்தையில் மீண்டும் அதிகரிக்கும் தங்கத்தின் விலை



சர்வதேச சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 2 ஆயிரம் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.
கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் தங்க விற்பனையாளர்கள் அதிகளவான இலாபத்தை ஈட்ட முயற்சித்துள்ளமையால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
அமெரிக்காவில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தல் மற்றும் உலக பொருளாதாரத்துக்குச் சேரும் பணத்தை தங்கமாக வைத்துக் கொள்வதற்கு முதலீட்டாளர்கள் முயற்சிப்பதும் இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, அமெரிக்க மற்றும் சீனாவுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதல் நிலையை அடிப்படையாகக் கொண்டு தங்கத்தின் விலை அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் சந்தையில் வெள்ளியின் விலையும் அதிகரித்துள்ளது. சமகாலத்தில் காணப்படும் நெருக்கடி நிலைமை மேலும் நீடித்தால் தங்கம் மற்றும் விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும் என்று முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)

# அதிக வாக்குகள் அங்கஜனுக்கு

## பாராட்டுகிறார் தயாசிறி

கொழும்பு.ஓக.11
வடக்கில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார் என்றுதெரிவித்தார்அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர.
பொதுத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கொழும்பில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுன இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பெரும் வெற்றியைப் பெற்றுள்ளன. பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டிருந்தாலும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 14 பேர் வெற்றி பெற்றுள்ளனர். வடக்கிலும் அதிக விருப்பு வாக்குகளுடன் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளரும் வெற்றிபெற்றுள்ளார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரது வழிகாட்டலில் அரசின் அனைத்து முன்னெடுப்புக்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளோம். எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு சிறப்பானதொரு ஆட்சி மக்கள் பலத்துடன் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம)

# விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுங்கள்

## பெரமுன வேட்பாளர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 11
பொதுத்தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவர் தமது விருப்பு வாக்குகள் மீண்டும் எண்ணப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.
இரத்தினபுரி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சுரங்க அம்பகாஹேதன்னவிடம் இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.
விருப்புத் தெரிவில் தமக்கு முன் உள்ள ரஞ்சித் பண்டாரவும் தாமும் கொலன்ன தொகுதியில் ஒரே அளவான வாக்குகளைப் பெற்றிருந்தபோதும் இறுதியில் ரஞ்சித் பண்டார 9ஆவது இடத்திலும் தாம் 10ஆவது இடத்திலும் பட்டியலிடப்பட்டதாக சானி ரோஹன கொடி துவக்கு என்ற அந்த வேட்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.
விருப்பு வாக்கு எண்ணும்போது முதல் சுற்றில் முரண்பட்ட எண்ணிக்கை காட்டப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். எனவே கொலன்ன தொகுதி விருப்பு வாக்கு மீண்டும் எண்ணப்படவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.
2015ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைக்காக மரணதண்டனை பெற்ற பிரேம்லால் ஜயசேகர இரத்தினபுரி மாவட்ட விருப்பு தேர்வில் 8ஆம் இடத்தைப் பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளார். அவர் மேன்முறையீடு செய்து அதிலும் அவரின் மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டால் அடுத்த நாடாளுமன்ற உறுப்பினராக 9ஆவது இடத்தில் உள்ளவரே தெரிவாவார். இதனைக் கருத்தில்கொண்டு சானி ரோஹன கொடிதுவக்கு தமது கோரிக்கையை முன்வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வடக்கு - கிழக்கை கைப்பற்றுவதற்காக இளைஞர்களுக்கு போதைப்பொருள்கள்

## விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

## தற்கால இளைஞர்களுக்கும் சாட்டையடி

**யாழ்ப்பாணம், ஓக. 11**

**போர் முடிவடைந்த பின்னர் இன்று வரை இருக்கின்ற அரசுகள் இராணுவத்தினரை வைத்திருப்பதற்குக் காரணம் வடக்கு கிழக்கை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகவே. இதற்கு அவர்கள் பயன்படுத்தும் யுத்திகளாக இளைஞர்களை போதைப்பொருள்களுக்கு அடிமையாக்கி, களியாட்ட நிகழ்வுகளில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களுடைய மனங்களை மாற்றுகின்றார்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ் தேசிய மக்கள் கூட்டணியின் தலைவரான சி.வி.விக்னேஸ்வரன்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்தத் தேர்தல் தற்செயலாக ஒரு தீர்மானத்தை தந்துவிட்டதாக நினைத்துவிட வேண்டாம். ஏனென்றால் இதில் ஒரு செயற்பாடு உள்ளது. 2013ஆம் ஆண்டு நான் வடமாகாண சபையின் முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றியிருந்தேன். அங்கே ஒரு கருத்தைக் கூறினார்கள். வடமாகாணத்தில் தான் அதிகமான போதைப்பொருள்கள் பாவிக்கப்படுகின்றன, வடமாகாணத்தின் ஊடாகவே போதைப்பொருள்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்படுகின்றன என்று எம்மைத் தாழ்த்தி அவதூறாகப் பேசினார்கள். 2009ஆம் ஆண்டு வரையிலே எந்த விதமான போதைப்பொருள் பாவனையும் இல்லை என்று அவர்களுடைய அறிக்கையே காட்டுகின்றது. ஆனால் 2013ஆம் ஆண்டிலே போதைப்பொருள் வடமாகாணத்தில் அதிகமாக பாவிக்கப்படுகின்றது என்றால் ஏதோ காரணம் இருக்க வேண்டும். போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார் உள்ளனர். அப்படி இருக்கையில் போதைப்பொருள் எவ்வாறு இங்கு வருகின்றது முன்னர் இல்லாத போதைப்பொருள்கள் இவர்கள் இருக்கும்போது எவ்வாறு வருகின்றன. அப்படி என்றால் இவர்களுக்கும் போதைப்பொருள்காரர்களுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கின்றதா என்று கேள்வி எழுப்பியபோது அவர்களால் எதையுமே கூற முடியாமல் இருந்தது.

போர் முடிவடைந்த பின்னர் இன்று வரை இருக்கின்ற அரசுகள் இராணுவத்தினரை வைத்திருப்பதற்குக் காரணம் வடக்கு கிழக்கை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகவே. இதற்கு அவர்கள் பயன்படுத்தும் யுத்திகளாக இளைஞர்களை போதைப்பொருள்களுக்கு அடிமையாக்கி, களியாட்ட நிகழ்வுகளில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களுடைய மனங்களை மாற்றுகின்றார்கள். எமது உரிமைக்காக போராடிய இளைஞர்கள் மடிந்த காலம் போய் வெறும் களியாட்ட நிகழ்வுகளிலே எமது இளைஞர்களுடைய மனம் லயிக்கக்கூடிய தான சூழலை ஏற்படுத்துகின்றார்கள்.

இப்பொழுது இருக்கும் இளைஞர்களுக்கு போரினுடைய வலிகள், துன்பங்கள் தெரியாது. ஏனென்றால் போர் நடைபெற்ற காலத்தில் அவர்கள் சிறுவர்களாக இருந்திருப்பார்கள் இப்பொழுது தான் வாக்களிக்கும் உரிமையைப் பெற்று இளைஞர்களாக உள்ளனர். அவர்களுக்கு என்ன தேவை களியாட்ட நிகழ்வுகளும் போதைப்பொருள் பாவனையும்தான். தற்காலிக சந்தோஷங்களில் இருக்கின்றார்களே தவிர வருங்காலத்திலே தமிழ் மக்களுக்கு என்ன நடைபெறப் போகின்றது, தமிழனின் கலாசாரம், பண்பாடு, மொழி இவை அனைத்தையும் அழிக்க துடிக்கின்றார்கள் போன்றவை பற்றிய எந்த சிந்தனையும் கிடையாது என்றார். (ம)

# அரசியல் உரிமை சார்ந்த விடயங்களில் முடிந்தளவு அழுத்தத்தை வழங்குவோம்!

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 11**

அமைக்கப்படவுள்ள புதிய அரசாங்கத்துக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்த விடயங்களில் எங்களால் முடிந்தளவு அழுத்தத்தை வழங்குவோம். இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வருவோம் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரானஎஸ்.வினோநோகராதலிங்கம்.



மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் உரிமை சார்ந்த விடயங்களில் வருகின்ற அரசுக்கு எங்களினால் முடிந்த அனைத்து அழுத்தங்களையும் வழங்குவோம். எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடும், தமிழ்த் தேசியத்தோடும் பயணித்து எங்களுடைய அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் எங்களுடைய இனப்பிரச்சினையைத் தீர்த்து அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் ஆதரவை நல்க வேண்டும்.

அதேபோல் மக்களினுடைய அன்றாட பிரச்சினைகள், அத்தியாவசிய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய கடமைப்பாடும் எங்களிடம் சுமத்தப்பட்டுள்ளது. நிச்சயமாக அந்தக் கடமையை நாங்கள் சரியான முறையில் செய்து முடிப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்தத் தேர்தலிலே வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை நாங்கள் உணர்கின்றோம்.

எதிர்காலத்தில் இந்த வீழ்ச்சிக்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து தமிழ் மக்களிடம் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அந்நியப்படுத்த முனைகின்ற சக்திகளை இனங்கண்டு அதற்கான தீர்வினை நாங்கள் பரிகாரமாக ஏற்று செயல்படுத்த வேண்டியகட்டாயம்எமக்குஉள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவை தீர்த்து வைக்கப்பட வேண்டியவை. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வது அவசியம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு என கடந்த காலங்களில் ஒருங்கிணைப்புக் குழு என்று ஒரு குழு செயல்பட்டு வந்தது. அது விரிவுபடுத்தப்பட்டு ஒழுங்கான நிர்வாக கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு செயல்வடிவம் கொடுக்கப்பட்டு எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டால் மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எதிர்கால வளர்ச்சியைக் கொண்டுவர முடியும்- என்றார். (ம-56)

# குடும்ப ஆதிக்கத்துக்காக பலத்தை பயன்படுத்தாதீர்!

## மஹிந்த தரப்புக்கு ஹரின் அழுத்தம்

அரசுக்கு மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையை குடும்ப ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக பயன்படுத்தாது மக்களுக்கான சேவையை ஆற்றுவதற்காக ஜனாதிபதியும் பிரதமரும் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, அரசுக்குச் சவாலாக அமையக்கூடிய பலமானதொரு எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணைக்கு மதிப்பளிப்பதோடு அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 2010ஆம் ஆண்டைப் போன்று தற்போதும் மக்கள் ராஜபக்ஷ அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கியிருக்கின்றனர். அதனை அவர்கள் குடும்ப ஆட்சிக்காக பயன்படுத்திக் கொள்ளாமல் மக்களுக்கு சேவை வழங்குவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு தனி எதிர்க் கட்சி அந்தஸ்தை மக்கள் வழங்கியிருக்கின்றனர். கடந்த காலங்களில் எம்மால் இழைக்கப்பட்ட தவறுகளை உணர்த்துவதற்காகவே மக்கள் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றனர். அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். நாடாளுமன்றத்தில் மக்களுக்கான குரலாக எமது செயற்பாடுகள் அமையும் - என்றார். (ம)

# நாடாளுமன்றத்துக்கு கலைஞர்கள் நால்வர்

அரசியல் கட்சிகளின் சார்பில் கலைத்துறையைச் சேர்ந்த 13 பேர் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களில் நான்கு பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொதுஜன பெரமுனவின் சார்பில் அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்ட நடிகர் உத்திக பிரேமரத்ன அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றார். அவர் அந்த மாவட்டத்தில் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 350 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டார். அடுத்ததாக கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட பிரபல நடிகர் ரஞ்சன் ராமநாயக்க ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 992 வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

பொதுஜன பெரமுனவின் சார்பில் காலி மாவட்டத்தில் போட்டியிட்ட பிரபல திரைப்பட நடிகை கீதா குமாரசிங்க 63 ஆயிரத்து 358 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றதுடன், அதே கட்சியில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட பிரியல் நிஷாந்த டி சில்வா ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 904 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். (ம)

# அடுத்த 5 ஆண்டுகளில் ஆட்சிபீடம் ஏறுவோம்!

## சஜித் சபதம்

கொழும்பு, ஓக. 11



**பொதுத்தேர்தலில் கிடைக்கப் பெற்றுள்ள மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கின்றோம். அதற்காக ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகள், நாட்டுக்கு ஒவ்வாத தீர்மானங்கள் மற்றும் அரசின் அடாவடித்தனங்களை வேடிக்கை பார்க்கப் போவதில்லை. எதிர்க்கட்சி என்ற அந்தஸ்து எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், அடுத்த 5 ஆண்டுகளில் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியே தீருவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பொதுத் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிகக்குறுகிய காலத்தில் மிகப் பெரும் வரலாற்று வெற்றியை அடைந்துள்ளோம். இந்த வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் எதிர்கொண்ட சவால்கள் இன்னோரன்னவை. எனினும் மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையை இறுதி வரை காப்பாற்றுவோம். 19ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க இடமளிக்கப் போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் ஆணையுடன் ஸ்தாபிக்கப்பட்டாலும், தேர்தலை நடத்துவதற்கு சில தினங்களே இருந்தபோது ஐ.தே.கவின் மாறுபட்ட தீர்மானத்தினால் புதிய கட்சி என்ற வகையில் பல போராட்டங்களின் மத்தியில் நாங்கள் இந்த மக்கள் ஆணையைப் பெற்றுள்ளோம். தற்போது எமக்கு கிடைத்துள்ள இந்த மக்கள் ஆணைக்கு நாங்கள் மதிப்பளிப்பதுடன், வெறுமனே வார்த்தைகளால் மாத்திரம் எமது நன்றியைத் தெரிவிக்காமல், எங்களது செயற்பாட்டின் மூலம் அதனை நாட்டு மக்களுக்கு உணரச் செய்வோம்.

இதேவேளை ஏனைய முன்னணி கட்சிகளுடன் ஒப்பிடுகையில் எமக்கு போதியளவான அடிப்படை வசதிகளோ, சொகுசு காரியாலயங்களோ இருக்கவில்லை. இந்நிலையில் எம்மைச் சுற்றிலும் பலர் எமக்கு எதிராக வதந்திகளை பரப்பியதுடன், எமது செயற்பாடுகளுக்கு இடையூறும் விளைவித்தனர். இவ்வாறான நிலையில் நாங்கள் கடந்து வந்த பாதை முட்கள் நிறைந்த பாதையாகும். எனினும் எதிர்க் கட்சி என்ற வகையில் எமது பொறுப்பை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம். தற்போதைய அரசுக்கு மக்கள் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்திருந்தாலும், அவர்களை வீழ்த்த முடியாது என்ற நிலைமை ஏற்படவில்லை. 2010ஆம் ஆண்டு இவ்வாறே மக்கள் அரசுக்கு அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். ஆனால் அவர்களால் நான்கு வருடங்களுக்கு மேலாக நிலைத்திருக்க முடியவில்லை.

### மாகாணசபை தேர்தல்

ஐக்கிய மக்கள் சக்தி, இந்த குறுகிய காலத்தில் பெற்றுக்கொண்டுள்ள மக்கள் ஆணையை வைத்துக் கொண்டு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளும். மக்கள் தங்களது மாற்று அரசியல் கட்சியாக எம்மைத் தெரிவு செய்துள்ளனர். அதற்கமைய நாங்கள் எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். மாகாண சபைத் தேர்தலின்போது எதிர்க்கட்சியின் வல்லமையை அரசு உணரும்.

தேசியப் பட்டியலில் உள்வாங்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பில் கட்சிக்குள் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றது. வெகு விரைவில் அதுதொடர்பில் அறியத்தருவோம். இதேவேளை முன்னைய காலங்களில் போன்று தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு தேசியப் பட்டியலில் இடம்பெற்றுக் கொடுப்பீர்களா என்று ஒருவர் என்னிடம் வினவியிருந்தார்.

அப்போது நான் தோல்வியுற்றவர்களுக்கு இடமளிக்கப்போவதில்லை என்று கூறியிருந்தேன். அந்த கொள்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. கொள்கைக்கு மதிப்பளித்து செயற்படும் கட்சி என்ற வகையில் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த எவருக்கும் தேசியப் பட்டியலில் இடமளிக்க மாட்டோம் - என்றார். (ம)

# மேயருக்கு ஆதரவாக நேற்று குருநாகலில் போராட்டம்

கொழும்பு,ஓக.11

குருநாகல் மேயர், தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் உட்பட ஐந்து பேரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக குருநாகலில் அமைதிப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குருநாகல் மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்பாக மேயர் துஷார சஞ்சீவ விதாரணவின் ஆதரவாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்ட விவகாரத்தில், குருநாகல் பிரதேச மேயர், நகர சபை ஆணையாளர் மற்றும் நகர சபையின் பிரதான பொறியியலாளர் உட்பட மேலும் இருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கடந்த 6 ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# முதலமைச்சர் பதவிக்கு இலக்கு வைக்கும் மூவர்

கொழும்பு,ஓக.11

2021 முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தற்போது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மூவர் விலகுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கட்சித் தலைமைகளுக்கு முன்கூட்டியே அவர்கள் அறிவித்துள்ளனர். மாகாண முதல்வர் பதவியை இலக்கு வைத்தே அவர்கள் களமிறங்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை, பொலனறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூவரே இவ்வாறு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரும், சவாலை ஏற்று மாகாண முதல்வர் பதவிக்காக போட்டியிடக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர் இம்முறை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வரவுள்ளார் எனவும் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (க-44)

# புதிய அமைச்சரவையில் 30அமைச்சர்கள் மட்டுமே

## பிரசன்ன ரணதுங்க வரையறை

கொழும்பு, ஓக. 11




நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவை 30 அமைச்சர்களுக்கு மிகைப்படுத்தாமல் இருக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

'நாட்டிற்கு வலுவான எதிர்த்தரப்புத் தேவை. முந்தைய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்தனர். ஆகையினாலேயே அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர்' என பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். பிரதமராக மஹிந்த பதவியேற்றுள்ள நிலையில் அமைச்சரவை எதிர்வரும் 12ஆம் திகதி பதவியேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கொரோனா வைரஸ் தொற்று 8 நாள்களின் பின்னரே அறிகுறிகள் தென்படும்

## விஞ்ஞானிகள் தகவல்

கொழும்பு,ஓக.11



கொரோனா வைரஸ் அடைகாக்கும் காலம் நீண்டு செல்வதால், தொற்று அறிகுறிகள் தெரிய 8 நாள்கள் ஆகும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அடைகாக்கும் காலம் தொடர்பில் சீன விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தியுள்ளனர்.

இதற்கு முன்பு அடைகாக்கும் காலம் என்பது 4 அல்லது 5 நாள்கள் என்று கூறப்பட்டு வந்தது. ஆனால் இந்த அடைகாக்கும் காலம் இப்போது 8 நாள்கள் வரை நீளுவதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளை ஆராய்ந்து விஞ்ஞானிகள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். தொற்றுப் பாதிப்புக்கு ஆளானவர்கள் அதற்கான அறிகுறிகளைக் காட்டத்தொடங்கும் காலம் தான் அடைகாக்கும் காலம் ஆகும்.

இந்த ஆய்வு முடிவுகள், 'சயன்ஸ் அட்வான்சஸ்' என்ற அறிவியல் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. மிகக் குறைவான எண்ணிக்கையிலான மாதிரிகளையும், குறைந்த அளவிலான தரவுகளையும், பாதிக்கப்பட்டவர்களின் சுய அறிக்கைகள் அடிப்படையிலும், அடைகாக்கும் காலம் 4 அல்லது 5 நாள்கள் என்று கூறப்பட்டு வந்தது என பீஜிங் சீன பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் சோங் யூ உள்ளிட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இவர்கள் நடத்தியுள்ள ஆய்வில், அடைகாக்கும் காலங்களை மதிப்பிடுவதற்கு குறைந்த செலவிலான அணுகுமுறை ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

அந்த அணுகுமுறையின் அடிப்படையில், ஆயிரத்து 84 கொரோனா நோயாளிகளை ஆராய்[illegible]ள்ளனர். இந்த நோயாளிகள் கொரோனா [illegible]ஸ் முதன்முதலாக தோன்றி வெளிப்பட்ட வுகான் [illegible]ருடன் பயணத் தொடர்பில் இருந்தவர்கள்.

இவர்களின் சராசரி அடை காக்கும் காலம் [illegible]து 7.75 நாள்கள் ஆகும். 10 சதவீத நோயாளிகள் [illegible] காக்கும் காலம் 14.28 நாள்கள் எனக் கா[illegible]னர். 14 நாள்கள் [illegible]ப்படுத்தலை நி[illegible] வைத்துள்ள சுகாதார அதிகாரிகளுக்கு இது [illegible] தரக்கூடும் என விஞ்ஞானிகள் தெரிவித்து[illegible]. ஆனால் இந்த அணுகுமுறை பல அனு[illegible]களை நம்பி இருப்பதாகவும், வைரஸ் [illegible] அடைந்துள்ள உலகின் பல்வேறு நிகழ்வு[illegible] இது பொருந்தாது என்றும் விஞ்ஞானிகள் [illegible]துள்ளனர்.

# மடுத் திருவிழாவில் மக்களுக்கு கட்டுப்பாடு

**மன்னார், ஓக. 11**

**மன்னார், மடு ஆலய பெருவிழாவுக்கு வருகை தரும்பொதுமக்களுக்கான அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

எதிர்வரும் 15 ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்திலுள்ள யாத்திரை ஸ்தலமான மடு ஆலய திருவிழா இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு ஆயத்தம் செய்யும் கூட்டம் ஒன்று மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில், மடு ஆலய புனித யோசவ் வாஸ் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற போதே மக்களுக்கான அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

அந்தக் கூட்டம் தொடர்பாக மன்னார் மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளதாவது,

குறித்த கூட்டத்தில், திருவிழாவுக்கு வருகைதரும் பக்தர்களது பாதுகாப்புத் தொடர்பான பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. இதில் குறிப்பாக கொவிட் 19 தொற்றுக் காரணமாக தொடர்ந்து நாம் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருவதனால் அதற்கேற்றவாறு சுகாதாரப் பாதுகாப்புடன் அதன் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைவாகவே இம்முறையும் இவ் மடு ஆலய விழாவைக் கொண்டாட வேண்டியுள்ளது. எனவே கடந்த ஆடி மாத விழாவில் பக்தர்கள் தங்குவதற்கு தடை செய்யப்பட்டிருந்தபோதும், இம்முறை மடு ஆலயம் வரும் பக்தர்களுக்கு தங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட முறையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதாவது மடு ஆலய வளாகத்துக்குள் இருக்கும் வீடுகளில் பக்தர்கள் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இவ் வளாகத்துக்குள் இருக்கும் வீடுகளில் தங்குவதற்கு ஏற்கனவே பதிவுகள் செய்யப்பட்டு விட்டன. ஆகவே இவ் விழாவுக்கு இங்குள்ள வீடுகளில் தங்குவதற்கு வீடுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டாம்.



பாதுகாப்பு நலன் கருதி இம்முறை இவ் விழாவுக்கு வருகை தருவோருடைய வாகனங்கள், வரும் பக்தர்களின் பெயர் விவரங்கள் யாவும் பதிவுக்கு உட்படுத்தப்படும். ஆகவே வருகை தருவோர் அதற்கேற்ற ஆயத்தங்களோடு வருகை தருவது அவசியமாகும். ஆலய வளாகத்துக்குள் நுழைவதற்கு எட்டு வாயில்கள் இருக்கின்றன. இவற்றினூடாக உள்நுழைவோர் சிறு கைப்பைகளுடன் மட்டுமே உள்வர அனுமதிக்கப்படுவர் - என்றார். (ஐ-60)

## நாவற்குழியில் இடம்பெற்ற கொரோனா பரிசோதனை

### எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி ஓக.11

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் நாவற்குழி ஐயனார் கோவிலடி மக்களுக்கு நடத்தப்பட்ட கொரோனாத் தொற்றுத் தொடர்பான எழுந்தமான பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பிரதேசத்தில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் மக்கள் தொகை அதிகரித்த பகுதிகளில். வாரத்தில் ஒருநாள் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகளை நடத்த சுகாதார மருத்துவ அதிகாரி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் . அதன்படி கடந்த சனிக்கிழமை நாவற்குழி ஐயனார் கோவிலடி பொது நோக்கு மண்டபத்தில் கொரோனாத் தொற்றுத் தொடர்பான பரிசோதனைகள்மேற்கொண்டனர். யாழ்ப்பாண பிராந்திய தொற்று நோயியல் மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனையில் கலந்துகொண்ட 30 பேரின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் பின்னர் முடிவுகள் நேற்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த அறிக்கையின் பிரகாரம் பரிசோதனையில் கலந்து கொண்ட எவருக்கும், கொரோனாத் தொற்று இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வரிசையில் அடுத்த பரிசோதனைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி உதயசூரியன் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# இருளில் அவதிப்படும் சாந்தசோலை கிராமம்

வவுனியா,ஓக.11

வவுனியா சாந்தசோலையில் பல வருடங்களாக வசிக்கும் குடும்பங்கள் காணி ஆவணம் இல்லாத காரணத்தால், தொடர்ந்து மின்சார இணைப்பைப் பெற முடியாதுள்ளனர்.

எமக்கான காணி உரிமை தொடர்பான ஆவணம் மற்றும் மின் இணைப்பு வசதிகளைக் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இது தொடர்பில் கடந்த மாதம் வவுனியா மாவட்ட செயலரிடம் மனு கையளிக்கப்பட்டது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

போர்க் காலத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக்குழுக்களால், வவுனியாவில் பல அரச மற்றும் தனியார் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. இடம்பெயர்ந்து வந்த குடும்பங்கள் அங்கு மீளக் குடியேற்றப்பட்டனர்.

கடந்த 1994 ஆம் ஆண்டு வவுனியா சாந்தசோலையில் இரண்டு பரப்பில் 26 வருடங்களுக்கு முன்னர் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற வசந்தனின் முயற்சியால் சில குடும்பங்கள் குடியமர்த்த ப்பட்டன.

17 குடும்பங்கள் வசித்து வரும் காணி, தனியார் ஒருவரின் பெயரில் இருப்பதாகத் தெரிவித்து, மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

இந்த விடயம் மின்சார சபையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, மின்சார இணைப்பு பெற்றுக்கொள்ளும் முயற்சி தடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்தக் குடும்பங்களிலுள்ள பாடசாலை மற்றும் தொழிலுக்குச் செல்லும் பிள்ளைகள் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து நீதியைப் பெற்றுக்கொடுக்க எவரும் முன் வரவில்லை. இங்குள்ள அரச திணைக்களங்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இவ்விடயத்தில் கைவிரித்துவிட்டனர்.

வவுனியாவில் பல கிராமங்களில் குடியேற்றப்பட்ட மக்களுக்கு காணி ஆவணம், மின் இணைப்பு, வீதிகள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் போன்ற கிராமக்கட்டமைப்பு வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் சாளம்பைக்குளத்தில், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றியுள்ளார்.

எனவே புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது காணிக்கான ஆவணம் மற்றும் மின்சார இணைப்பு போன்ற எமது அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

## காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு,ஓக.11

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கொழும்பு வரை மற்றும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற்றர் வரை காற்று வீசும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பேருவளை முதல் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களில் 2 முதல் 2.5 மீற்றர் வரை கடலலை உயரக்கூடும். இதனால் கடல்சார் ஊழியர்களும், மீனவர்களும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (க)

## ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு மன்னாரில் கலந்துரையாடல்



மன்னார்,ஓக.11

ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்சவின் பணிப்பின் பெயரில் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்குதல் மற்றும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சிகள் வழங்குதல் தொடர்பில் முடிவுகளை மேற்கொள்ளும் விசேட க்லந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை, மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட மேலதிக செயலர் அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில்,

ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தின் மேற்பார்வை குழுவின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப் படவுள்ள ஆயிரத்து 830 பேருக்கான பயிற்சிகள் மற்றும் அவர்களது மேலதிக தகமைகளை வலுப்படுத்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலகங்களையும் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் , திட்டமிடல் பணிப்பாளர், உதவிப் பிரதம செயலாளர் உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-56)

# மரண அறிவித்தல்

## அமலநேசன் றோஸ்மலர் (புனிதம்)



இல.07, செபஸ்ரியன் வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமலநேசன் றோஸ்மலர் (புனிதம்) நேற்றுமுன்தினம் (09.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான யுவக்கீன் சிறிலம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் யுவக்கீன் அமலநேசனின் அன்பு மனைவியும், டினேஸ் (ஜேர்மனி), சாம்றோய் ஆகியோரின் பாசமிகு தாயும், கார்த்திகா, மிதுனா, றமணன் ஆகியோ ரின் மாமியும், புஸ்பராசா, ஜெயக்குமார், றெஜினா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இன்பராணி, மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், சபார்த்தினிகர்த்திகா (ஜேர்மனி), கவாஸ்கர் (ஜேர்மனி) ஆகியோரின் சிறியதாயும், சாமுவேல், ஒபேராலின்சி, கெய்லிகெனா, காபிரியல், இலியானா ஆகியோரின் பேர்த்தியும், செல்வி, செல்லா, டொறிஸ், அலிஸ்ரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செபஸ்ரியன் வீதி,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 267 5053**

தோற்றம்
23.05.1958

மறைவு
09.08.2020

# மரண அறிவித்தல்



## கந்தசாமி பாலகணபதிப்பிள்ளை

(ஓய்வு நிலை கூட்டுறவுப்பரிசோதகர்)

புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பாலகணபதிப்பிள்ளை நேற்று (10.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - கண்ணம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவமங்களத்தின் அன்புக் கணவரும், தவநிதி (கொழும்பு), நிதாகரன் (கனடா), சுபாஸ்கரன் (லண்டன்), தயாநிதி (சுபாசினி - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிளா (பிரான்ஸ்), சதீஸ் (லண்டன்), ஆகியோரின் பெரியப்பாவும், Lion. சாந்தகுமார் (L/c of Colombo Kotahena East), துஷாநிதி (கனடா), வனஜா (லண்டன்), சந்திரகுமார் (சுவிஸ்), உதயன் (பிரான்ஸ்), ஜின் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, பத்மாவதி, சொர்ணகாந்தி மற்றும் கெங்காலெட்சுமி, நாகேஸ்வரி, அறஞ்செல்வி (கனடா), செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, குமாரசாமி (மதிப்பு), வெற்றிவேல், செல்லத்துரை மற்றும் துரைச்சாமி, கிருஸ்ணமூர்த்தி (கனடா), இராசலிங்கம், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், இராமச்சந்திரன், கலாவதி மற்றும் ஆனந்தன், தனலட்சுமி (பொன்மணி) ஆகியோரின் மைத்துனரும், ஷகானா, ஷவிக்னன், காவியா, உதயா, அக்ஷரன், அக்ஷனா, துசித்தா, திவ்யா, கிருத்தீஸ், கிருத்திகா, அனனியா, அக்சனா, அருண், ஜெனுஷா ஆகியோரின் பேரனும், அகனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புளியங்கூடலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை மடியில்
22.01.1940

ஆண்டவன் அழைப்பில்
10.08.2020

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 770 8708**

## வழிப்பறி...

கட்டுவனைச் சேர்ந்த ஒருவரை பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவ தலைமையிலான அணியினர் தேடிவந்தனர்.

அந்தச் சந்தேக நபர் மல்லாகம் சுடலை ஒன்றில் மறைந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடம் 2 தங்கப் பவுண் சங்கிலி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் வழிகாட்டலின் கீழான உப பொலிஸ் பரிசோதகர் நிதர்ஷன் தலைமையிலான சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அளவெட்டியைச் சேர்ந்த மற்றொருவரும் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர்கள் கொள்ளையிடும் தங்க நகைகளை வாங்கி உருக்கி விற்பனை செய்யும் சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த ஒருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கொள்ளைச் சந்தேக நபர்கள் இருவரும் வளலாய், அச்சுவேலி மற்றும் கட்டுவன் ஆகிய பிரதேசங்களில் அண்மைக்காலமாக இடம்பெற்ற 5 வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் சந்தேக நபர்கள் மூவரும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)


## மரண அறிவித்தல்

### கதிரவேலு ஞானசம்பந்தன்



பிறப்பு 27.08 1942 இறப்பு 10.08.2020

யாழ். சுழிபுரம் வடக்கைப் பிறப்பிடமாகவும் செட்டிகுறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஞானசம்பந்தன் நேற்று (10.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - ஏகாம்பேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வரும். சாந்தினி தேவி. காலஞ்சென்ற சாவித்திரிதேவி மற்றும் சூரியகுமாரன் (ஆஸ்தி ரேலியா) ஆகியோரின் சகோதரரும். புவனேஸ்வரியின் அன்புக் கணவரும். ஶ்ரீகாண்டீபன் (உபஅஞ்சல் அலுவலகம் - பனிப்புலம்). உதயகிருஷ்ணன் (நில அளவைத் திணைக்களம் - திருநெல்வேலி). சுவர்ணமதி (லண்டன்). பாமினி (லண்டன்). சுபத்திரா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். செல்வகுமார் (லண்டன்). சுரேஷ் (லண்டன்). மயூரன் (சுவிஸ்).சயந்தினி. தனுஜா ஆகியோரின் மாமனும். சுவேதா. நிகிலன். சுபன். ஆரபி. வைஷ்ணவி. சிந்துஜன். ஜஷானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டியகுறிச்சி
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி இரத்தினசிங்கம் புவனேஸ்வரி

(நீலா ரீச்சர்)

(ஓய்வுநிலை ஆசிரியர் -
யா/ குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)

குப்பிழானைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசிங்கம் புவனேஸ்வரி (நீலா ரீச்சர்) 04.08.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும். காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும். இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ குப்பிழான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும். சிறீரங்கன் (அறிவிப்பாளர் T.R.T தமிழ் ஒலி - பிரான்ஸ்). சிறீரமணன். சிறீதாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும். சாந்தினி. இதயராணி (தீபா). காலஞ்சென்ற சேகர் ஆகியோரின் அன்பு மாமியும். சாரதாம்பாள். சிவநேசராசா. வசந்தரா (ராணி). புஸ்பராணி (சந்திரா) ஆகியோரின் சகோதரியும். தர்சினி. சிந்திஜா. ஜெனுசாந். காலஞ்சென்ற தர்சிகா மற்றும் ஜதுர்சிகா. ஆதவன். அபிஷேக். லக்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும். சஜானாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.08.2020 புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஶ்ரீமகால்"
குப்பிழான் வடக்கு,
ந. இரத்தினசிங்கம் - 0049 688 1961 207

தகவல்:
குடும்பத்தினர்.

# University of Jaffna – Sri Lanka
# Faculty of Management Studies & Commerce
## Master of Business Administration (MBA) Intake V – 2018/2019

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA) - 2018/2019 and invites applications for the admission from qualified candidates. Details of the course can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: *http://www.maco.jfn.ac.lk/*

**ELIGIBILITY REQUIREMENTS**

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

OR

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

OR

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:
- Chartered institute of marketing (CIM) UK
- Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
- Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
- Chartered Institute of Management Accountants (CIMA)
- Chartered Institute of Personnel and Development (CIPD)
- Association of Chartered & Certified Accountants (ACCA)
- Chartered Accountants (CA) Sri Lanka
- Certified Management Accountant (CMA) Sri Lanka
- Institute of Engineers (CIE) UK/Sri Lanka
- Institute of Chartered Secretaries and Administrators
- At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
- Attorney – at – Law

OR

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the board of study and the senate of the University of Jaffna.

**PROGRAMME STRUCTURE**

| | | |
|---|---|---|
| Structure | - | Semester based Course Unit System |
| Semester duration | - | Each semester extends for 20 weeks |
| Duration | - | Two years |
| Medium of instruction | - | English |

**COURSE FEE**

Total course fee would be LKR Four Hundred Thousand (LKR 400,000.00) per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 | Year 2 |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 205,000 | LKR 145,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 230,000** | **LKR 170,000** |

* Application Fees: LKR 2000/=

**The closing date for application : 18.09.2020.**

**APPLICATION PROCEDURE**

Application form and Paying in voucher can be downloaded from the Faculty website at *http://www.maco.jfn.ac.lk/* or it can be obtained from MBA Office, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Sir. Pon, Ramanathan Road, Thirunelveli, Jaffna. Duly completed application and payment voucher should be forwarded to "**Coordinator, MBA programme, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Sir. Pon, Ramanathan Road, Thirunelveli, Jaffna**" by registered post or submit it in person at the MBA Office, Faculty of Management Studies & Commerce on or before the closing date. Indicate "**Application for MBA Programme – Intake V**" in the top left hand corner of the envelope.

More relevant information could be obtained through **021 221 6394 / 021 222 3610.**


**Registrar**
**University of Jaffna, Sri Lanka**

**முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

**நுண்நிதியியல் டிப்ளோமா (பகுதிநேர)**
**கற்கை நெறிக்கான முடிவுத்திகதியை நீடித்தல்**

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தினால் கோரப்பட்ட 2020/2021 கல்வியாண்டுக்கான நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 31.08.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இக் கற்கைநெறி வார இறுதி நாட்களில் நடாத்தப்படுவதுடன் தொழில்புரியும் எவரும் இக்கற்கைநெறியைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படுவர்.
மேற்படி டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**அமரர் ஆறுமுகம்**
**துரைராஜா (பெனடிற்)**

கடந்த 14.07.2020 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் துரைராஜா (பெனடிற்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 13.08.2020 வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் சொக்கன் கலட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெறும் சபிண்டீகரண நிகழ்விலும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தோற்றம் 09.12.1936 — மறைவு 14.07.2020

கூவில்
புலோலி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



மலர்வு 10 . 07 . 1944

உதிர்வு 10 . 08 . 2020

## இரத்தினம் காசிநாதர் (காசி)

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் காசிநாதர் நேற்று (10.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சந்திரமலரின் அன்புக் கணவரும், கேமலதா, லோகேஸ்வரி, பகீரதன், பிரபாகரன், ராமேஸ்வரன் மாலினி, கஸ்தூரி, மாலதி, காலஞ்சென்ற ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நேசராசா, காலஞ்சென்ற மகேசானந்தம், புனிதவதி, சிவாஜினி, கலையழகன், அற்புதன், தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணிக்கு கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆடியபாதம் வீதி,**
**கல்வியங்காடு சந்தை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**
**0777 465 537**

### அராலியில்...

லேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் 8 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் தொடர்ந்தும் பொலிஸ் கண்காணிப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

### தமிழ் தலைமைகள்...

கிச் செல்கின்றது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும், அபிவிருத்திகளைப் பெறுவதற்கும் தமிழ்த் தலைவர்கள் இணைந்து செயற்பட வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். அதை நிறைவேற்றுவார்கள் என்றே எதிர்பார்த்துள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்தஒன்றியம்விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது

இலங்கையில் தமிழ் மக்கள் ஏனைய பெரும்பான்மை இன மக்களைப் போன்று வாழ்வதற்கான உரிமை உண்டு. பொருளாதார ரீதியான அபிவிருத்திகளை அரசிடம் இருந்து சம அளவில் பெறுவதற்கான உரிமை உண்டு. இந்த உரிமைகளைப் பெறுவதற்காகக் கடந்த காலத்தில் தலைவர்கள், அறிஞர்கள் பல்வேறு வடிவங்கைளில் போராடி வந்துள்ளனர்.

இந்தப் பல்நிலை போராட்ட வடிவங்களில் மக்கள் ஈடு செய்ய முடியாத இழப்புக்களைச் சந்தித்திருந்தனர். என்றோ ஒருநாள் சுபீட்சம் கிடைக்கும் என்ற நிலையில் மக்கள் இழப்புக்களைத் தாங்கிக் கொண்டனர். அதை அடைவதற்காகக் காத்திருக்கின்றனர். தங்கள் நோக்கத்தை அடைவதற்கான பிரதிநிதியாக அரசியல் தலைவர்களை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் எதிர்பார்க்கையை அடைவதற்கான ஜனநாயக வழியில் தந்திரோபயமாகச் செயற்பட்டு வருகின்றது. அதனாலேயே பெரும்பாலான தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கத் தங்கள் ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர்.

40 ஆண்டுகளுக்கு மேலாக ஜனநாயகரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் செயற்பட்ட ஆளுமை மிக்க தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், செல்வம் அடைக்கலநாதனும் உள்ளனர். 40 ஆண்டுகளுக்கு மேலாக ஜனநாயக வழியில் மக்களுக்காக வாழ்ந்த ஆளுமை மிக்க தலைவராகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜாவும் இருக்கின்றார். இவர்கள் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சரியான முறையில் வழிப்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். தேவையேற்படின், சூழ் நிலைக்கு அமைய ஒரே நோக்கமுடைய கட்சி உறுப்பினர்களையும் அவர்கள் தங்களுடன் இணைத்து செயற்பட வேண்டும்.

நீண்டகாலமாக அன்பான முறையில் ஜனநாயக வழியில் தமிழ் மக்களுடனும் தமிழ்த் தலைவர்களுடனும் சுமூக உறவைப் பேணிய ஆளுமை உள்ள மக்கள் தலைவர் மாவை சேனாதிராஜா தொடர்ந்தும் தமிழரசுக் கட்சிக்கு தலைவராக இருக்க வேண்டும். தேசியப் பட்டியலின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டும். 90சதவீதமான மக்களுடைய எதிர்பார்க்கை இதுவேயாகும்.

நிறுவனங்களுக்கு கட்சிகளுக்கு ஒரு யாப்பு உண்டு. அந்த யாப்புக்கமைவாகப் பதவிகள் தெரிவு செய்யப்படவேண்டுமே தவிர குறுக்கு வழியில் அல்லது சர்வாதிகார முறையில் பதவிகளை பெற முனைவது அது மக்கள் மத்தியில் ஏளனமாகப் பேசப்படுகிறது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கட்சியின் தலைவர் தெரிவு பின்வருமாறு இடம்பெறவேண்டுமென அதன் யாப்பு குறிப்பிடுகிறது.

தலைவர் தெரிவின்போது ஆயுட்கால உறுப்பினர் 5 பேர் அதை முன்மொழிய வேண்டும், பதவிக்காலம் கட்சியின் அடுத்த மாநாடுவரை தொடரும், போட்டிகள் இருந்தால் தேர்தல் மூலம் பெரும்பான்மை மூலம் உறுதிப்படுத்தல், போட்டியில் வாக்களிக்கும் தகுதி பொதுச் சபைக்கே உண்டு, தெரிவு செய்யப்பட்ட கட்சித் தலைவர் கட்சியாளர் மாநாடு வரை பதவி வகிப்பர். மீண்டும் அவரே தெரிவு செய்யப்படலாம் அல்லது சூழ்நிலைக்கு ஏற்ப பதவி நிர்ணயிக்கப்படலாம் என்று கட்சி யாப்பில் உள்ளது.

தமிழ் மக்களுடைய உரிமைப்போராட்டத்தில் உதயன் பத்திரிகையினதும் அதன் முகாமை இயக்குநர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் பங்களிப்பு மதிப்பிட முடியாது. நெருக்கடியான காலங்களில் மக்கள் மத்தியிலும் சர்வதேச ரீதியாகவும் கருத்துக்களையும் தமிழ் மக்களுடைய அவலங்களையும் உலகறியச் செய்தவர். ஒரு உடலில் முழுமையான சரியான இயக்கத்துக்கு குருதியோட்டம் எவ்வளவு முக்கியமோ அதேபோல ஏற்படக்கூடிய இழப்புக்களையும் கருத்தில்கொள்ளாமல் தமிழ் மக்களுடைய எதிர்பார்க்கைகளை மக்களிடையே பதித்து பரவச் செய்தவர். இன்று சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் யாவருக்கும் இந்த உண்மை தெரியும்.


மீண்டும் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கும் அபிவிருத்திகளைப்பெறுவதற்கும் அன்றாடவாழ்வை சுமுகமாக மேற்கொள்வதற்கும் தமிழ் தலைவர்கள் ஒன்றிணைந்து கட்சிவிதிகளுக்கமைவாக செயற்படுவதனையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். இதை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். என்றுள்ளது. (எ)

## காணிகள்/ வீடுகள்

இலங்கையில் எப்பாகத்திலிருக்கும் காணிகள், வீடுகள், கடைகள் என்பனவற்றில் சில உடன் விலைக்கு வாங்குவோம்.
**காணிகள் விற்பனைக்குண்டு.**
**(உடன் விலைக்கு)**
**077 522 1132, 076 534 6562, 077 147 9416**

## கண்ணீர் அஞ்சலி

**கந்தையா**
**இராமலிங்கம்**



எமது கல்லூரி ஆசிரியை செல்வி **சிவப்பிரியா இராமலிங்கம்** அவர்களது தந்தை சிவபதமடைந்த செய்திகேட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்.
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.

## யாழ்ப்பாணச் சிறையிலிருந்து மீண்டதும்

# போதைப்பொருள் பாவனைக்கு கட்டாயப்படுத்தப்படுகின்றோம்

## அங்குள்ள கைதிகள் கவலையுடன் கூறுகின்றனர்

## பாதிப்புகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது யார்?

**யாழ்ப்பாணம், ஓக. 11**

**"சிறைச்சாலையைவிட்டு நாங்கள் வெளியில் வருகின்றபோது நண்பர்கள் மற்றும் முகவர்களின் ஊடாக நாங்கள் போதைப் பொருள் பாவனைக்கு கட்டாயப்படுத்தப்படுகின்றோம்" என்று யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் கூறியுள்ளனர் என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.**

மருத்துவமனையிலிருந்து ஒரு குழுவினர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்றிருந்தனர். அங்குள்ள கைதிகளுடன் கலந்துரையாடினர். அதன்போதே கைதிகள் மேற்கண்டவாறு கூறினர் என்று சத்தியமூர்த்தி தனது முகப்புத்தக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இளைஞர்கள் தீய வழியில் செல்வதைத் தடுப்பது யார்? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

சிறைச்சாலையில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைசெய்த குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

நீண்டநேரமாக அங்கிருந்த அத்தியட்சகர் மற்றும் அலுவலர்கள் சிறையில் இருக்கும் இளைஞர்களோடு உரையாடலை மேற்கொண்டிருந்தோம்.

வடபகுதியில் உள்ள பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுகின்றனர் என்பதை அறிந்துகொண்டேன். அதை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்?

சமுதாயத்தில் உள்ள பலரும் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மிகவும் உன்னிப்பாக கவனித்துக் கொள்ள வேண்டும்.

போதைப்பொருள் பாவனையில் சிறைவாசம் அனுபவித்து வெளியில் வருபவர்களைத் தொடர்ச்சியாகக் கவனித்து தீய செயலில் ஈடுபடாத வண்ணம் வழி காட்ட வேண்டும்.



சிறைச்சாலையில் தற்போது எந்தவிதமான போதைப்பொருள் பாவனையும் இல்லை. (ஆனால் முன்னைய காலங்களில் போதைப் பொருள் ஏதோ ஒரு வழியில் சென்று அடைந்தமை குறிப்பிடத்தக்கது).

சிறைகளில் உரிய நேரத்தில் உணவு, உடற்பயிற்சி மற்றும் ஆலோசனை என்பன சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன. எல்லோரும் நல்லவராக நடந்து கொள்கிறார்கள். வெளியில் வந்தால் தங்களுக்கு இவ்வாறான நல்லதொரு சூழல் இருக்காது. என்று கூறினர். நல்லதொரு சூழலை யார் ஏற்படுத்திக் கொடுப்பது? என்று சத்தியமூர்த்தி தனது பதிவில் கேள்வியெழுப்பியுள்ளார். (த)


நீங்கா நினைவலைகள்

8ஆம் ஆண்டு



சந்திரகுமார் பிறேமறதி

மலர்வு 31.03.1975 உதிர்வு 11.08.2012


5ஆம் ஆண்டு



சுப்பையா இராசாத்தி

மலர்வு 03.01.1946 உதிர்வு 09.09.2015

5ஆம் ஆண்டு



சுப்பையா பிறேமகாந்

மலர்வு 05.08.1976 உதிர்வு 23.06.2015

ஆண்டுகள் பல சென்றும் ஆறவில்லை எம் துயரம்
நீண்டு நினைவுதரும் உங்கள் பசுமையான நினைவுகளால்
நிதம் வாழத் தவிக்கின்றோம்.

சுதுமலை தெற்கு,
அண்ணாமலை வீதி,
மானிப்பாய்.

என்றும் நினைவில் குடும்பத்தினர்.
சந்திரகுமார் [இத்தாலி], டக்ஸன் [குவைத்],
கஜீபன் [குவைத்], அபிராம் [குவைத்]


## முயற்சிகள்...

புலிகள் அமைப்புக்கும் இடையே சமாதானத் தூதுவராகச் செயற்பட்டிருந்த நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பக்கத்தில் சூழல் தொடர்பான பதிவொன்றைப் பதிவிட்டிருந்தார். அதற்கு ஒருவர், எரிக்சொல்ஹெய்ம் என்கின்ற இந்த நபர் முன்னர் விடுதலைப்புலிகளுக்கு பெருந்தொகை வருமானத்தை வழங்குபவராகவும், ஊட்டச்சத்தினை வழங்குபவராகவும் பராமரிப்பாளராகவும் விளங்கியவர் தற்போது இவர் ஒரு சூழல் செயற்பாட்டாளர் எனப் பதிவிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார் எரிக் சொல்ஹெய்ம்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

இந்த நபர் சமாதானத்தை ஊக்குவிப்பதற்காகப் பாடுபட்டவர். நாங்கள் இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளிடமிருந்து கிடைத்த அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட்டோம். நாங்கள் இந்தியாவுடனும் சமாதான முயற்சிகளை ஆதரித்த ஏனையவர்களுடனும் நெருக்கமாக இணைந்து செயற்பட்டோம். நாங்கள் வெற்றியடைந்திருந்தால் இலங்கையில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காப்பாற்றியிருக்க முடியும். என்று தெரிவித்துள்ளார். (எ)

## வாக்களிக்க...

கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 59 லட்சத்து 92 ஆயிரத்து 96 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றனர். அவர்களில் ஒரு கோடியே 33 லட்சத்து 87 ஆயிரத்து 951 பேர் வாக்களித்திருந்தனர். 26 இலட்சம் வரையிலானோர் வாக்களிக்கவில்லை.

இந்த நிலையில் பொதுத் தேர்தலில் வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை 48 லட்சத்தைத் தாண்டியுள்ளது. கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம-க)

## கூட்டமைப்பு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள மக்களை எதிரிகளாகக் காண்பித்தும், சமஷ்டி போன்ற பிரிவினைவாதக் கொள்கைகளையும் முன்னிலைப்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை காலமும் அரசியல் நடத்தியது. மாறாக வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்காக எவ்வித அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. இந்த நிலையில் தாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை அறிந்துகொண்டு தெளிவுபெற்ற தமிழ் மக்கள் இம்முறை தக்கபாடத்தைப் புகட்டியுள்ளனர்.

அத்துடன் மாற்றுத் தலைமைகளுக்கு வாக்களித்துள்ளனர். அரசுடன் இணைந்து மக்களுக்கு சேவையாற்றியதாலேயே டக்ளஸின் கட்சிக்கு கடந்தமுறையை விடவும் இம்முறை வாக்குகள் கிடைக்கப்பெற்று ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பிள்ளையானின் கட்சிக்கும் மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

எனவே, மக்களின் மனோநிலை என்ன என்பதை கூட்டமைப்பு புரிந்துகொள்ள வேண்டும். கொள்கைகளை மாற்றிக்கொண்டு இலங்கையர்களாக முன்நோக்கி பயணிக்கும் வகையில் தனது அரசியல் பயணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அதேவேளை, தென்னிலங்கை மக்களின் அமோக ஆதரவை பெற்றுள்ள அரசும் அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும் என்றார். (ம-44)

## 28 அமைச்சர்களின்...

ணிக்கை, அமைச்சு, உள்ளடங்கும் நிறுவனம் மற்றும் தொடர்பான சட்டம் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய சிறப்பு வர்த்தமானியே வெளியிடப்பட்டது அமைச்சுக்கள், தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கல்வி மற்றும் சுகாதாரம், விளையாட்டு மற்றும் தொழிநுட்பதுறை விருத்தி ஆகிய அமைச்சுக்கள் தொடர்பில் வர்த்தமானியில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு:

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு.

நிதியமைச்சு:

நிதி மற்றும் முதலீட்டு வர்த்தகம் மற்றும் அரச தொழில் முயற்சி கொள்கை மறுசீரமைப்பு, சமுர்த்தி, வீட்டு வர்த்தகம், நுண்கடன் சுய தொழில் வியாபார அபிவிருத்தி, கரும்பு உற்பத்தி அபிவிருத்தி மற்றும் தேசிய வளங்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு.

புத்தசாசனம் மதவிவகாரம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு:

தேசிய மரபுரிமைகள் மற்றும் கலை கலாச்சார இராஜாங்க அமைச்சு,

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு:

நகர அபிவிருத்தி மற்றும் கடல்பாதுகாப்பு திரவ விநியோகம்., சமூல வலுவூட்டல், கிராமிய வீடமைப்பு மற்றும் வீடமைப்பு திரவ விநியோகம், தோட்ட வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு, வலுவூட்டல் இராஜாங்க அமைச்சு.

நீதியமைச்சு:

சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு

வெளிநாட்டலுவல் அமைச்சு:

வலய நல்லுறவு விவகார இராஜாங்க அமைச்சு:

அரச சேவை மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சிமன்ற அமைச்சு.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற விவகார இராஜாங்க அமைச்சு.

கல்வி அமைச்சு:

பெண் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, ஆரம்ப கல்வி மேம்பாடு, பாடசாலை உட்கட்டமைப்பு, கல்வி சேவை, கல்வி மறுசீரமைப்பு, பரீட்சை, பல்கலைக்கழக மற்றும் தூரநோக்கு கல்வி கொள்கை, திறன் அபிவிருத்தி, துறைசார் கல்வி, தொழிநுட்பம் மற்றும் புதிய கற்கைகள், பௌத்த மத சார் கல்வி, பிரிவெனா, மற்றும் பௌத்த பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சு.

சுகாதார அமைச்சு:

மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் கண்காணிப்பு, தேசிய மருத்துவம் முன்னேற்றம் கிராமிய மற்றும் ஆயுர்வேத அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி சுகாதார இராஜாங்க அமைச்சு.

தொழிற்துறை அமைச்சு:

சர்வதேச தொழில் ஊக்கப்படுத்தல் மற்றும் தொழிற் சந்தைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு.

சுற்றாடல் அமைச்சு.

வனஜீவராசிகள் மற்றும் வனவளத்துறை காப்புறுதி அமைச்சு:

வனஜீவராசிகள் மற்றும் யானை மனித மோதல், வனமீள் புத்தாக்கம் தொடர்பான இராஜாங்க அமைச்சு

விவசாயம்:

நெல் மற்றும் தானிய உற்பத்தி, சிறுஏற்றுமதி பயிர்கள் உற்பத்தி மேம்பாடு மற்றும் உர உற்பத்தி விவசாயம் தொடர்பான தொழிநுட்ப விருத்தி இராஜாங்க அமைச்சு, கிருமிநாசினி உற்பத்தி மற்றும் விநியோகம். விவசாய காணி அபிவிருத்தி, முட்டை உற்பத்தி தொடர்பான இராஜாங்க அமைச்சு.

நீர்பாசன அமைச்சு:

மகாவலி வலயத்துக்குட்பட்டுள்ள குள அபிவிருத்தி, கிராமிய விவசாய அபிவிருத்திக்கான நீர்பாசன விநியோக இராஜாங்க அமைச்சு.

காணி அமைச்சு:

காணி அபிவிருத்தி, அரச காணிமுகாமைத்துவம் மற்றும் சொத்து அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

கடற்தொழில் அமைச்சு:

மீன்பிடித்துறை, நன்னீர் மீன்பிடி தொழில், மீன்பிடி துறைமுக அபிவிருத்தி, கடற்சார் வள ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு.

பெருந்தோட்டத்துறை அமைச்சு:

தோட்ட காணி அபிவிருத்தி, தேயிலை தொழிற்துறை நவீனப்படுத்தல், மற்றும் ஏற்றுமதி முன்னேற்றம், சிறு ஏற்றுமதி உற்பத்திகள் மேம்பாடு, உபரி பயிர்ச் செய்கைஅபிவிருத்தி இராஜாங்கஅமைச்சு,

நீர் வழங்கல், அமைச்சு:

கிராமிய மற்றும் நகர நீர்வழங்கல் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

மின்சாரத்துறை அமைச்சு:

சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

சக்தி வலு அமைச்சு

துறைமுகம் மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சு:

கப்பற்துறை கட்டமைப்பு வசதிகள், கப்பற்துறை விநியோக அபிவிருத்தி மற்றும் படகு நவீனப்படுத்தல் இராஜாங்க அமைச்சு.

பெருந்தெருக்கள் அமைச்சு:

கிராமிய மற்றும் அதிவேக தெருக்கல் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

போக்குவரத்து அமைச்சு:

வாகன கண்காணிப்பு, பேருந்து போக்குவரத்து மற்றும் புகையிரத மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு:

கிராமிய மற்றும்பாடசாலை மட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

சுற்றுலாத்துறை அமைச்சு:

விமான சேவைகள் மற்றும் வலய நாடுகளுக்கான ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

சந்தைப்படுத்தல் அமைச்சு:

கூட்டுறவு சேவை, முதலீட்டாளர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

கைத்தொழில் அமைச்சு:

ஆடைக் கைத்தொழில் உற்பத்தி, மாணிக்கம் மற்றும் தங்க ஆபரண உற்பத்தி, தளபாட மற்றும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

ஊடகத்துறை அமைச்சு:

தபால் சேவை மற்றும் ஊடகவியலாளர்களின் தொழிற்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு. (எ)

## தேசியப் பட்டி...

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு தேசியப் பட்டியல் வாய்ப்புக்கிடைத்திருந்தது. அதில் யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இழுபறி நிலைமை காணப்படுகின்றது.

நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான கலையரசனுக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்படுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் அறிவித்திருந்தார். எனினும் தேசியப்பட்டியல் நியமனத்தைக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவுக்கு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. அதையடுத்து கலையரசனின் நியமனம் இடைநிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கேட்டபோது, எடுக்கப்பட்ட முடிவில் மாற்றத்தை ஏறபடுத்த நான் விரும்பவில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநித்துவம் இம்முறை இல்லை. அதன்காரணமாகவே நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான கலையரசனுக்கு தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கியுள்ளோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்குத்தான் தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்குப் பூரணமான விருப்பமாக இருந்தாலும்கூட அம்பாறை மாவட்ட மக்களின் நிலைமையைக் கருத்தில்கொண்டு கலையரசனுக்கே தேசியப்பட்டியல் ஆசனம் வழங்க வேண்டும் என்ற முடிவை எடுத்தோம். அந்த முடிவில் இனிமேல் மாற்றத்தை ஏற்படுத்தினால் அம்பாறை மாவட்ட மக்கள் குழம்புவார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டாலும் தலைவர் என்ற அந்தஸ்து உயர்ந்ததாக இருக்கும். எமது கட்சியின் தலைவர் தன்னுடைய பணிகளை மேலும் உயர்வாகச் செய்வார் என்றே நம்புகின்றோம். தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் பொதுத்தேர்தல் ஒன்றில் தோற்கடிக்கப்பட்ட காலத்தில்தான் அவர் கட்சியை மிகவும் கட்டமைத்தார் என்பதை அனைவருக்கும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன் என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனம் கலையரசனுக்கே உரியது. அதில் மாற்றம் எதையும் கொண்டுவர வேண்டாம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தன்னிடம் கூறினார் என்று தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் நேற்றுக் காலை தெரிவித்துள்ளார். (எ-22)

## வர்த்தமானியி...

நாடாளுமன்ற உறுப்பினரின் வெற்றிடத்துக்காக ஒருவரைப் பரிந்துரைப்பது தொடர்பில் பெரும் சர்ச்சை நிலவிய நிலையில், கலையரசனின் பெயரைப் பிரசுரிக்க வேண்டாம் எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் மூன்று தலைவர்களும் கூட்டாக ஒப்பமிட்டு ஆணைக்குழுவின் தவிசாளருக்கு நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். அதில் கலையரசனின் நியமனத்தை நிறுத்திவைக்குமாறு கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கையை ஆணைக்குழு ஆராய்ந்தபோதும் கலையரசனின் பெயர் தேர்தலில் போட்டியிட்ட கட்சியின் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டமையால் அதன் அடிப்படையில் கலையரசனின் பெயரை அரச அச்சகத்துக்கு அனுப்பியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-22)

## 25 பேருக்கு...

23 பேருக்கும், ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இருந்து நாடு திரும்பி தனிமைப்படுத்தப்பட்டவர்களில் இருவருக்கும் கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதையடுத்து நாட்டிலுள்ள கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 867 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான 2 ஆயிரத்து 593 பேர் குணமடைந்து வீடுதிரும்பியுள்ளனர் கொரோனா தொற்று நோயாளர்களில் 263 பேர் தொடர்ந்தும் நாடு முழுவதும் உள்ள 9 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை, 70 பேர் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். நாட்டில் இதுவரை கொரோனா தொற்றால் 11 பேர் உயிரிழந்துள்ளனர். (எ)

# சம்பியனானார் பியோனா ஃபெரோ

ரோம், ஓக.11

மகளிர் 'ஃபெமினிலி டி பலேர்மோ' பகிரங்க சர்வதேச டென்னிஸ் தொடரின், மகுடத்துக்கான பரபரப்பான இறுதிப் போட்டியில், பிரான்ஸின் பியோனா ஃபெரோ வெற்றிபெற்று சம்பியனாகியுள்ளார்.

இரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், பிரான்ஸின் பியோனா ஃபெரோ, எஸ்டோனியாவின் அனெட் கொன்டாவிட்டை எதிர்கொண்டார்.

விறுவிறுப்புடன் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை பியோனா ஃபெரோ 6:2 என்ற கணக்கில் எளிதாகக் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், பியோனா ஃபெரோவுக்கு, அனெட் கொன்டாவிட் கடும் நெருக்கடி கொடுத்தார்.

எனினும், மனம் தளராது சிறப்பாக விளையாடிய பியோனா ஃபெரோ, இரண்டாவது செட்டை 7:5 என்ற கணக்கில் போராடிக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தைப் வென்றார். (ரி2)



# காலிறுதியில் பார்சிலோனா

லண்டன், ஓக.11

**சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி 4:2 என்ற கோல் கணக்கில் நபோலி அணியை வீழ்த்தி கால்இறுதிக்கு முன்னேறியது.**

கழக அணிகளுக்கி டையிலான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடர் பல்வேறு நாடுகளில் நடந்து வருகிறது. இதில் 'ரவுண்ட் 16' எனப்படும் சுற்று ஒன்றில் பார்சிலோனா கழகம் (ஸ்பெயின்), நபோலி (இத்தாலி) அணியை பார்சிலோனா நகரில் நேற்றுமுன்தினம் இரவு எதிர்கொண்டது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் பார்சிலோனா 3:1 என்ற கோல் கணக்கில் நபோலியை தோற்கடித்தது. பார்சிலோனா அணியில் கிளைமென்ட் லெங்லெட் (10 ஆவது நிமிடம்), லயோனல் மெஸ்சி (23 ஆவது நிமிடம்), லூயிஸ் சுவாரஸ் (45 ஆவது நிமிடம்) ஆகியோர் கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர். மெஸ்சி 29 ஆவது நிமிடத்திலும் ஒரு கோல் அடித்தார். ஆனால் காணொளி மறுஆய்வு ரீப்ளேயில் அவர் பந்தை கைகளால் கையாண்டது தெரியவந்ததால் அந்த கோல் மறுக்கப்பட்டது.

இந்த விரு அணிகள் இடையே நடந்த முதலாவது லீக் ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்திருந்தது. இரு ஆட்டங்கள் முடிவின் அடிப்படையில் பார்சிலோனா அணி 4:2 என்ற கோல் கணக்கில் நபோலியை வெளியேற்றி தொடர்ந்து 13 ஆவது முறையாக கால்இறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு ஆட்டத்தில் பேயர்ன் முனிச் (ஜெர்மனி) அணி 4:1 என்ற கோல் கணக்கில் செல்சியாவை (இங்கிலாந்து) பந்தாடியது. முதலாவது லீக்கிலும் பேயர்ன் முனிச் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டிருந்ததால் சிக்கலின்றி கால்இறுதியை உறுதி செய்தது.

கால்இறுதி ஆட்டங்களில் அடலன்டா (இத்தாலி) பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்), லெப்ஜிக் (ஜெர்மனி) அட்லெட்டிகோ மாட்ரிட் (ஸ்பெயின்), பார்



சிலோனாபேயர்ன் முனிச், மான்செஸ்டர் சிட்டி (இங்கிலாந்து)லயன் (பிரான்ஸ்) ஆகிய அணிகள் மோதுகின்றன. (ரி2)

## பணியாளர் தேவை

1. சிற்றூழியர் - (MINOR STAFF)
2. வரவேற்பாளர்கள் - (RECEPTIONIST) (ஆண்/ பெண் இருபாலாரும்)
3. வேலை பழகி செய்ய விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.
4. வடிவமைப்பாளர் (PHOTOSHOP)

MOORTHY DIGITAL
62/20, STANLEY ROAD, JAFFNA.
077 224 7428

# பென் ஸ்டோக்ஸ் விலகல்

லண்டன், ஓக.11



கிரிக்கெட் விளையாட்டில் இங்கிலாந்தின் ஓல் ரவுண்டரான பென் ஸ்டோக்ஸ் அவசரமாக நியூசிலாந்து செல்லவுள்ளதால், பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகளி லிருந்து விலகியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பென் ஸ்டோக்ஸ், பாகிஸ்தா னுக்கு எதிரான டெஸ்ட் போட்டி களில் விளையாடி வருகிறார். இவர் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் துணைக் கப்டன் ஆவார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்று 1: 0 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கின்றது. பென் ஸ்டோக்ஸ் இரண்டாவது இன்னிங்ஸில் 3 இலக்குகள் வீழ்த்தி, பாகிஸ்தானை குறைந்த ஓட்டங்களில் தோல்வியடையச் செய்ய முக்கிய காரணமாக இருந்தார்.

இந்த நிலையில் அவர் உடனடியாக நியூசிலாந்து செல்லவுள்ளார். இங்கிலாந்து கிரிக்கெட் சபை மற்றும் பென் ஸ்டோக்ஸ் குடும்பம் தரப்புக்கள் இது அவரது தனிப்பட்ட விடயம் என்பதால் மேற்கொண்டு ஏதும் கேட்க வேண்டாம் எனத் தெரிவித்துள்ளன.

பென் ஸ்டோக்ஸின் பெற்றோர் நியூஸிலாந்தில் வசித்து வருகின்றனர். அவரது தந்தைக்கு உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டதையடுத்து அவர் தற்போது வீட்டில் இருந்தவாரே சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில் தற்போது அவர் நியூசிலாந்து செல்லவுள்ளார். பென் ஸ்டோக்ஸ் நியூசிலாந்தில் பிறந்து இங்கிலாந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி2)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 11 . 1946



மறைவு
10 . 08 . 2020

### திருமதி விஜயலெட்சுமி குககுமாரராஜா

நல்லூர் செட்டித்தெருவை பிறப்பிடமாகவும், நல்லூர் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலெட்சுமி குககுமாரராஜா நேற்று (10.08.2020) திங்கட்கிழமை மாலை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி - சிதம்பரவல்லி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான S.R. கனகசபை - நீலாயதாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபை குககுமாரராஜாவின் (முன்னாள் இளைப்பாறிய உபஅதிபர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) அன்பு மனைவியும், காயத்திரி (கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு), சுகந்தினி (மாகாண திறைசேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தனலட்சுமி சரவணமுத்து மற்றும் சுந்தரகணேசன், வரகுகநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74, நல்லூர் குறுக்குத்தெரு,
நல்லூர்

தகவல்:- குடும்பத்தினர்.
077 352 0103



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.